RATNA PRAKASH

ON

GEMS & PRECIOUS STONES

PART I

BY

T. B. JAYASUNKER DAVEY

...த்தினப் பிரகாசம்

நவரத்தினங்களைப்பற்றிக் கூறுவது

PUBLISHED BY

J. DAVEY & CO.

TANJORE

Copyright Registered] *[Price As. 8*

RATNA

P

Gems and Precious Stones Reviewed in English ... ... P

ரத்தினப் பிரகாசம்

முதற்பாகம்

இப்புத்தகத்தில் அடங்கியவை

இது, வைரம், மரகதம், மாணிக்கம், பத்மராகம், புஷ்ப வைடூர்யம், கோமேதகம், இந்திரநீலம், முத்து, பவழம், முதலியவைகள் உண்டாகுமிடங்கள், தோஷங்கள், கு தேவதை, பரீக்ஷை நீரோட்டம். ஜாதிபேதம், த்ராஸ லட்சணம், பிரிவு, அணிவதன் பலன்கள் ஆகிய இவைகளை க்கக்கூறுவது.

இந்நூலின் இரண்டாம்பாகம் சீக்கிரம் வெளிவரக்கூடுமாத இதைப்பற்றிய பலவிஷயங்கள் அதில் விரிவாகத் தெரிந்துகொ லாம்.

	விஷயம்.	பக்கம்.
1	சிலப்பதிகாரம்	1
2	நவரத்தினப்பரீக்ஷை விஷயம் ...	3—5
3	வைரம்	5--11
4	மரகதங்கள்	11—13
5	மாணிக்கமும், பத்மராகமும் ...	14—18
6	புஷ்பராகம்	18—19
7	வைடூர்யம்	20—21
8	கோமேதகம்	21—22
9	இந்திரநீலம்	22—24
10	முத்து	25—31
	பவழம்	31—32
	... ...	32
	... ...	32

RATNA PRAKASH

ON

Gems and Precious Stones

BY

T. B. JAYASUNKER DAVEY.

PART I.

15359

PUBLISHED BY

J. DAVEY and Co.,

TANJORE.

1916

ALL RIGHTS RESERVED.]

[Price As. 8

JEWELS IN HERALDRY.

The To paz represents "or" (Gold) or the planet **Sol.**
The pearl or crystal represents "Argent" **(Silver)** or the planet **Luna.**
The ruby represents "Gules" red or the planet **Mars.**
The Sapphire represents "azure" (blue,) or the planet Jupiter.
The diamond represents "Sable" (black,) or the planet saturn.
The emerald represents "Vert" (Green,) or the planet Venus.
The amethyst represents "purpure" (purple), or the planet Mercury.

Each month is supposed to be under the influence of some precious stone:

January:	Garant.	**Constancy.**
February:	Amethyst.	**Sincerity.**
March:	Blood stone.	**Courage.**
April:	Diamond.	**Innocence.**
May:	Emerald.	**Saccess in love.**
June:	Agate.	**Health and long life.**
July:	Cornelian.	**Content.**
August:	Sardonyx.	**Conjugul fidelity.**
September:	Chrysolite.	**Antidote to madness.**
October:	Opal-	**Hope.**
November:	Topaz.	**Fidelity.**
December:	Torquoise.	**Prosperity.**

Jewels for signs of the Zodiac

Aries:	Ruby.
Taurus:	To-paz.
Gemini:	Carbuncle.
Cancer:	Emerald.
Leo:	Sapphire.
Virgo:	Diamond.
Libra:	Jacinthi.
Scorpio:	Agate.
Sagittarious:	Amythyst.
Capricornus:	Beryl.
Aquarious:	Onyx.
Pisces:	Jasper.

From the dictionary of phrase & Fables.

GEMS AND PRECIOUS STONES.

THE discovery of diamond fields in South Africa and Brazil has attracted the attention of many diamond merchants from all parts of the world. Long before the discovery of the above fields India was famous for its diamond fields which produced finest gems of big sizes and brilliant lustre. Sir Thomas Hungerford Holdich says "**Gold and precious stones were accumulated and hoarded in India from so early a time that it is probable, that for very many centuries of world's existence India was regarded as the only source of such treasurers.**" "**Diamond, Rubies and other precious stones are the heritage of India and the source of them is apparently inexhausted.**"

Louis Dieaulafait says. "The discovery of diamond cutting has been very genarally attributed to Louis deBerque a resident of Bruges, in the year 1465 ; but in fact the actual discoveries of Berquen amounted only to the construction of a polishing wheel to be used with diamond dust, and a systametic arrangement of the facets. Long before his time diamonds were cut in **India** and **China** and the inventory of the Jewells of Louis of Anjou drawn up between 1360 and 1368, included a number of cut diamonds. As an example of Indian cutting the author gives a figure of a flat diamond that belonged to the grand Mogul."

The diamonds earliest known to the Romans were furnished by Ethopia; but when Pliny wrote during the first half-century of the Christian era they had already been brought from **India**, and thence forward until the 18th century, no diamond mines were known but those of the East Indies, in the Empire of the Mogul and in the island of Borneo.

From time immemorial **Indian diamonds** are famed for beauty, lustre and size.

During Tavernier's time "Golconda diamond mines employed 60,000 people and had already proved so rich that, as Firishta records Sultan Mahomed A. D. (1177-1206) left in his treasury more than four hundred pounds weight of these precious gems."

DIAMOND. வைரம்.

Sir Clement-le-neve Forster mention in "Ore and stone mining" that diamonds are found in alluvial gravel, in Conglomerate in **Brazil, Borneo, India, New South Wales** and **British Guiana** and **Africa.**

* This most valuable of precious stones, and the hardest of the known substances, consists of pure or nearly pure carbon.

The primary crystaline form of the diamond is a regular octahedron, of which there are modifications ; but it also occurs in cubes and rhomboidal dodecahedrons, and sometimes in twin crystals ; The faces are frequently convex.

The most valuable diamonds are perfectly colourless and transparent but those which are of decided tints of pink, green or blue are much prized, while those which are slightly coloured are held in least estimation. They are found in a detached state in alluvial deposits, from which they are extracted by washing.

Diamonds were originally discovered in Bengal and in the island of Borneo.

The most celebrated mines of India were those of Golconda and of Roalcondal in the Maharatta Empire. In 1728 they were found in Brazil, and since that time the mines of minas GERAS have produced most of the stones imported into Europe.

At the present time diamond cutting is principally carried on by jews at Amsterdam. They are cut chiefly into two forms called brilliants, and rose diamonds or rosets, and some times into what are called, from their flat surface, table diamonds.

The brilliant form which has from 56 to 64 facets, was first introduced by cardinal Mazarin in 1650. It is especially calculated to bring out the lustre and refractive powers of the gem.

The largest known diamond is mentioned by Tavernier as belonging to the great Mogul. It was found in A. D. 1550 in Golconda, and in its original state is said to have weighed 900 carats.

Among the crown jewels of Russia is a magnificent diamond weighing 194 carats. It is of the size of a pegions egg, and was purloined from a Brahminical idol by a french

* From the Cyclopedia of Arts and Science .

soldier ; it passed through several hands, and was ultimatly brought by the Empress Catherine for 90000-l and an annuity of 4000-l.

One of the most perfect diamonds hither to found, is a brilliant brought from India by a gentleman of the name of Pitt who sold it to the Regent Duke of Orleans for 125000-l. It weighs 136¼ carats (430. 55) grains.

Another very celebrated diamond is the Kohinoor (the hill of lustre) which became the property of Her Mejesty on the annexation of the Punjab by the East India Company in the year 1850.

It is mentioned by Tavernier in 1665 as the property of the Moghul Emperor and to gether with the Dorainoor or (the ocean of lustre) another stone nearly as valuable, formed part of the plunder seized by Nadirshah at the taking of Delhi in 1739. When brought to this country it weighed l $186\frac{7}{16}$ carats but it has since been recut by the Messrs. Gerrard and although the weight of the stone has been reduced to 103¾ carats, its brilliancy and general appearance have been greatly improved.

RUBY. மாணிக்கம்.

The true oriental ruby, the sapphire, the topaz and the emerald, though differing greatly in appearance, are chemically the same substance, pure Alumina ; but jewellers give the name to several other minerals possesing brilliant red colour. The oriental ruby is the most valuable of all gems when of large size, good colour, and free from flaws. The ruby in colour varies from the highest rose tint to the deepest carmine, but the most valuable tint is that of a pegion's blood, a pure deep, rich red and generally occurs in 6 sided prisims.

The best come from **India**, **Burmah** and **Ceylon**. Bohemia furnishes an inferior article. They are found in Ava, Siam, the Cuplem mountains ten days journey from Syrian, a City in **Pegu, Ceylon, India, Borneo, Sumatra** on the Elbe, on the Espailly in Auvergne, and Iser in Bhohemia. The ruby and sapphire mines of Burma are 25 miles south of Moongheet. Fine rubies have from time to time been discovered in many of the corrundum localities of Southern India.

In Ceylon at Badulla and Saffargam and also it is said at Matura Rubies, Sapphires and Topoz are found.

Badakshan has been famed for rubies since the time of Marco Polo for producing Balas Ruby. Its mines are in the Gharau District on the right bank of the Oxus. They have not been worked since Kanduz Chief took Badakshan.

Balas ruby is a term used by Lapidaris to designate the rose red varieties of Spinal. Spinal is seen of all shades ; Blood red, the proper spinal ruby ; rose red, the Balas ruby ; the orange or red rubicelle ; and Violet coloured or adamantine ruby.

Red Tourmaline is some times mistaken for the ruby spinel and Balas rubies are found in Ceylon, Ava, Mysore and Beluchistan. The spinal ruby is comparatively of little value ; but they are often sold for a true ruby and the true ruby is occasionally parted with as a spinal ruby.

EMERALD. மரகதம்.

A mineral occuring in green six sided prisims, and much valued as a gem. It is a delicate of Alumina and Glucina. The colour is due to oxide of chromium. The most celebrated modern locality of the emerald is muzo, in new granada, when it is found in a lime stone containing ammonites.

Emeralds are also found in Peru, at cundina - Marco in old Columbia, Canjugum in Hindustan, and in the Hanbach Vally, Salzburg. The mines from which the ancients obtained their emeralds are said to have been situated near mount zeburh, in Upper Egypt.

CATS EYE. வைடூரியம்.

A beautiful variety of translacent chalcedonic quartz, of various shades of greenish grey or brownish red. The substance of the stone is penetrated by small parallel fibers of asbestos, and when polished it displays a peculiar pearly opalescence or floating internal light (chatoyant) much resembling the mutable reflections exhibited by the contracted pupil of the eye of a cat when held towards the light. It is chiefly brought to this country from Ceylon. But it also occurs in Scotland, and a pale green variety is found in the vale of beris associated with epidote. It is used in jewellry and is cut en (cabochon.)

PEARLS. முத்து.

Pearls are found in several mollasas inhabiting shallow seas and sand banks in the old and new world. The best known

localities are the Persian gulf, west coast of Ceylon in the gulf of Mannar. Panama the shores of Calipornia Australia, Red Sea Arabian coasts, the Aru Islands, zebu, the Sulu Archipelago, Mindanayo coast of New guinea, Torres Straits, Gulf of Omra and coasts of Japan.

SAPPHIRE. இந்திரநீலம்.

*The name given to brightly coloured varieties of corundum. The blue are generally called Sapphire ; The red oriental Ruby. Sapphire consists essentially of cry stalised alumina and is inferior in hardness only to the diamond It occurs in variously terminated six sided prisms and in rolled masses ; and is found in the beds of rivers and associated with crystalline rocks, chiefly in Ceylon and Pegu ; But it is also met with in Bohemia ; near Expailly in Auvergne; and in New South Wales. Sapphires have been used not only as ornamental stones but for the lenses of microscopes, for jewelling watches, and when bored, for drawing very fine gold and silver wire.

TOPAZ. புஷ்பராகம்.

A silicate of alumina containing fluorine. It occurs crystallised and in water worn pebbles, and is harder than Quartz, but less hard than ruby. It is limpid and transparent, colourless, or yellow, or of a wine colour, blue, green, etc.

When heated the Brazilion Topaz becomes rose red, and is some times in this state passed of as a Ruby ; The Saxon Topaz loses its colour by heat. When without flaws and of a good colour it is much employed in jewellery. The name is derived from Topazas an island in the Red Sea, whence the ancients procured their topazes.

ZIRCON. கோமேதகம்.

Is found in the rivers of Ceylon It occurs in crystals. Colour sometimes, green, Brown, red, yellow, grey.

The colourless or slightly smoky are called zircon. When of a fine colour and transparent, these are some times used in jewellery.

---

† Dictonary of Science, Arts and literature.

SUNSTONE. சூர்யகாந்தம்.

A resplendent variety of Felspar (Adularia) of a very pale yellowish colour ; found in Siberia, Norway, and elsewhere. The play of colour which it exhibits arises from minute lamellar crystals of oxide of iron which are embeded in it.

MOON STONE. சந்திரகாந்தம்.

A transparent variety of adularian, which, by reflected light presents a pearly or silvery play of colour, not unlike that of the moon. It is held in considerable estimation as an ornamental stone especially on the Continent, and is sometimes cut into rings and brooch stones. The finest specimens are brought from Ceylon.

GARNET.

The precious Garnet is employed in jewellery, while coarse Garnets are used instead of Emery for cutting gems and polishing metal and stone.

CORAL. பவழம்.

Corals are found in many parts of the water world, but those that are used for ornaments principally come from the mediterranian and especially from the African coasts ; The Indian ladies wear corals of deep red colour around their neck. It dispels evil spirits. It is used in medicinal preparations by the Hindus.

GEM CRYSTALS.

" Pass not the shapeless lump of Crystal by,
Nor view the icy mass with careless eye ;
All royal pomp its value far exceeds,
And all the pearls the Red Sea's bosom breeds,
This rough and unform'd stone, without a grace,
Midst rarest treasurers holds the chiefest place."

Claudian.

உ

ரத்தினப்பிரகாசம்.

நவரத்தினங்களைப்பற்றிக் கூறுவது.

இஃது,

டி. பி. ஜெயசங்கர் தவே அவர்களால்

இயற்றப்பட்டு,

தஞ்சாவூர்.

ஜே. தவே அண்டுகோ அவர்களால்

பதிப்பிக்கப்பெற்றது.

முதற்பாகம்.

1916.

Registered Copy Right.

உ

முகவுரை.

அறிஞர்களே !

நம் பரதநாட்டில் ஆண் பெண் இருபாலாரும், தோஷங்கள் இல்லாதனவும், நல்லகாந்தி யுடையனவுமாகிய நவரத்தினங்களாலாகிய ஆபரணங்களைப் பண்டைக்காலம் தொடங்கி அணிந்துவருவதால் பல பாக்கியங்களையும், கீர்த்தியையும், தேக சௌக்கியத்தையும் அடைந்து வருகிறார்களென்பதை அறியாத பலர்க்கும் ஸ்மிருதிஸாரம் பிரஹத்ஸம்ஹிதை, ரஸரத்ன ஸமுச்சயம், பாவப்பிரகாசம் முதலிய வடமொழி நூல்களிலும், சிலப்பதிகாரம், கல்லாடம், பரஞ்சோதி முனிவர் செய்த திருவிளையாடல் முதலிய தமிழ்நூல்களிலும் பரந்துகிடந்த (நவரத்தினங்களின்) குணதோஷங்கள் முதலியவற்றை, இத்தமிழ்நாட்டிலுள்ள ரத்தினவியாபாரிகளும், ரத்தினங்களை வாங்குபவர்களும், எளிதில் அறிந்து உபயோகிக்கும்படி எளிய தமிழ் நடையில் எழுதிப் பதிப்பிக்கலானேன்.

இதற்குமுன் இதுபோன்ற (நவரத்தின ஸம்பந்தமாக) தனிப் புஸ்தகம் தமிழ்ப் பாஷையில் இல்லாமையாலும், பலபாஷைகளிலும் உள்ள விஷயங்களை ஒன்றுசேர்த்து அவற்றுள் ஸாரமாக உள்ளன வற்றையே முறைப்படுத்தி எழுதியுள்ளேன்; ஆதலால் பல இடங்களிலும் முறைதவறி இருக்கலாம். இதில் காணப்படும் குற்றங்களை எனக்கு அறிவித்தால் மிக்க நன்றியறிதலுடன் அவற்றை ஏற்றுக்கொண்டு மறுபதிப்பில் திருத்தி அவர்கள் பெயருடன் வெளியிடுவேன்.

இங்ஙனம்,

டி. பி. ஜெயசங்கர் தவே.

தஞ்சாவூர்.

சிலப்பதிகாரம்.

தமிழ்ப்பாஷையில் உள்ள பழைய காப்பியம் ஐந்தனுள் சிலப்பதிகாரம் என்பதும் ஒன்று. இந்நூல், கோவலன் கண்ணகி என்பவரது சரித்திரத்தை விரிவாகக் கூறுவது. இதைச்செய்தவர் சேரராஜாவின் தம்பியாகிய இளங்கோவடிகள் என்பவர். இதில், அக்காலத்து மதுரையிலிருந்த இரத்தினக்கடைகளின் பிரிவுகளையும், ரத்தினங்களின் பிரிவுகளையும், ரத்தினங்களின் குணதோஷங்களையும், விரிவாகவும் விளக்கமாகவும் காணலாகும்.

இதைச் செய்தகாலம் சுமார் 1760 வருஷங்களுக்குமுன் என்பதைத் தக்கஆதாரத்துடன் புத்திமான்களாகிய அறிஞர்கள் பலர் கூறுகிறார்கள்.

ஊர்காண்காதை.

வைரம்.

௧௮௦ - ௧௮௨. காக பாதமுங் களங்கமும் விந்துவு
மேகையு நீங்கி யியல்பிற் குன்று
நூலவர் நொடிந்த நுழைநுண் கோடி
நால்வகை வருணத்து நலங்கே ழொளியவும்.

மரகத ஜாதி.

௧௮௪ - ௧௮௫. எகையு மாலையு மிருளொடு துறந்த
பாசார் மேனிப் பசுங்கதி ரொளியவும்.

மாணிக்கவர்க்கம்.

௧௮௬ - ௧௮௭. பதுமமு நீலமும் விந்தமும் படிதமும்
விதிமுறை பிழையா விளங்கிய ஜாதியும்.

புருடராக வர்க்கம்.

௧௮௮. பூச வுருவிற் பொலந்தெளித் தனையவும்.

வைடூரியம்.

௧௮௯. தீதறு கதிரொளித் தெண்மட் டுருவமும்.

நீலமணிவர்க்கம்.

௧௯௦. இருடெளித் தனையவும்.

கோமேதகவர்க்கம்.

கசுo. இருவே றுருவவும்.

மாணிக்கம், புருடராகம், நீலம், கோமேதகம்.

கசுக-கசுஉ. ஒருமைத் தோற்றத்தை வேறு வனப்பி
னிலங்கு கதிர்விடூஉ நலங்கெழு மணிகளும்.

முத்து வர்க்கம்.

கசுரு-கசுசு. காற்றினு மண்ணினுங் கல்லினு நீரினுந்
தோற்றிய குற்றந் துகளறத் துணிந்தவுஞ்
சந்திர குருவே யங்கா ரகனென
வந்த நீர்மை வட்டத் தொகுதியும்.

பவள வர்க்கம்

கசுஎ-கசுஅ. கருப்பத் துளையவுங் கல்லிடை முடங்கலுந்
திருக்கு நீங்கிய செங்கொடி வல்லியும்.

இரத்தினக்கடைத்தெரு சிறப்பு.

கசுகூ-உ00. வகைதெரி மாக்க டொகைபெற் றோங்கிப்
பகைதெற லறியாப் பயங்கெழு வீதியும்.

இவ்விஷயம் கல்லாடத்திலும், திருவிளையாடற்புராணத்திலு ம் நன்குசொல்லப்பட்டிருக்கிறது.

இவ்வித நவரத்தினங்களையும் மற்றுமுள்ள சில உயர்ந்த வஸ்துக்களையும் தினந்தோறும் காலையில் கண்டால் அவர்கள் நினைத்தகாரியம் நிறைவேறி, பலவிதச் செல்வமும் சுகமும் உண்டாகும். அதன் விவரமாவது:—

ஞாயிற்றுக் கிழமையில் மாணிக்கத்தையும் கோமேதகத்தையும், திங்கட்கிழமை நல்முத்துக்களையும் வைடூரியக் கற்களையும், செவ்வாய்க்கிழமை பவளத்தையும், புதன்கிழமை மரகதத்தையும், வியாழக்கிழமை புஷ்யராகத்தையும், வெள்ளிக்கிழமையில் வைரத்தையும், சனிக்கிழமையில் நீலரத்தினத்தையும் பார்க்கவேண்டும். வெண்தாமரைப் புஷ்பத்தையும், செந்தாமரைப் புஷ்பத்தையும், ஆம்பல் புஷ்பத்தையும் காலையில் பார்த்து அணிந்து கொண்டால் மிகவும் நன்மை உண்டாகும்.

ஸ்ரீகணேசாயநம:

நவரத்தின பரீக்ஷை விஷயம்.

இப்போது ஒன்பது விதமான ரத்னங்களின் பரீக்ஷை விஷயம் சொல்லப்படுகிறது. இவ்வுலகத்தில் வாழும் மனிதர் ஒவ்வொருவரும் நவரத்தினங்களின் குணத்தையும் தோஷத்தையும், அறிந்துகொண்டிருக்கவேண்டும். அவ்விதம் ரத்னபரீக்ஷை யறிவதனால், இவ்வுலகில் பல சுபங்களையும், என்றும் நிலைத்திருப்பதாகிய கீர்த்தியையும் அடையலாகும்.

வெகு காலத்துக்குமுன் அகஸ்தியமஹாரிஷி மேருபர்வதத்தின் தாழ்வரையில் நெடுநாள் தவம்செய்து, அத்தவத்தின் பலன் கைவரப்பெற்றமையால், மகிழ்ச்சியோடு பதரிகாச்சிரமம் என்னுமிடத்திற்கு வந்து வீற்றிருந்தார்; அப்பொழுது அவருடையசிஷ்யர்களான அநேகமஹரிஷிகள் பக்தியுடன் அகஸ்தியமஹாரிஷியைப் பணிந்து, அஞ்சலி பண்ணிக்கொண்டு, பின்வருமாறு சொல்லுகிறார்கள்:—

மஹரிஷியே! இவ்வுலகத்திலிருக்கும் தேவர்களும், அசுரர்களும், கந்தருவர்களும், வித்தியாதரர்களும், உரகர்களும் ஆகிய இவர்கள் எவ்விதமான ரத்னங்களால் கிரீடம், அரைஞாண், கழுத்துஆபரணம், கைச்சங்கிலி, காப்பு, வங்கி முதலிய பல ஆபரணங்களைச்செய்து அணிந்துகொள்ளுகிறார்கள்? அப்படிப்பட்ட ரத்னங்கள் எங்கு உற்பத்தியாகின்றன? எங்கு இருக்கின்றன? அவைகளின் நிறமென்ன? குணமென்ன? தோஷங்கள் என்ன? விலை என்ன கிருபையுடன் எங்களுக்கு விளக்கவேண்டும்.

முனிவர்கள் கூறிய மொழிகளைக்கேட்ட அகஸ்தியமஹாரிஷியானவர், நவரத்தினங்களின் உற்பத்தியையும், அவைகள் இருக்கும் இடத்தையும், அவற்றின் வர்ணத்தையும், குணத்தையும், தோஷத்தையும், விலையையும், கையினாற் செய்யக்கூடிய சங்கேதத்தையும், அளவையும், உலகங்களின் நன்மையைக்கருதி சொல்லத் தொடங்கினார்.

"மஹரிஷிகளே! முன்பு சிருட்டிகாலத்தில் இப்பூமியின் ஒவ்வோர் இடத்திலும் இரத்தினங்கள் கலந்து மறைந்திருந்தன. அந்தப்பூமிக்கு ரத்னகர்ப்பை என்றுபெயர்.

உலகத்தில் பிராமணர், க்ஷத்திரியர், வைசியர், சூத்திரர் என்று முக்கியமாக நான்குஜாதிகள் யிருப்பதுபோல (1) பிராமண ஜாதி (2) க்ஷத்திரியஜாதி (3) வைசியஜாதி (4) சூத்திரஜாதி என ரத்னங்களிலும் நான்கு பிரிவுகள் உண்டு.

இப்படிப் பிரிவுபட்ட ரத்னங்கள் கிருதயுகத்தில் இரண்டு இடங்களில் உண்டாயின திரேதாயுகத்தில் இரண்டுதேசங்களில் உண்டாயின துவாபரயுகத்தில் இரண்டு தேசத்தில் உண்டாயின. இக்கலியுகத்திலும் இரண்டு தேசங்களில் உண்டாகின்றன. இவ்வித ரத்னங்கள் கிருதயுகத்தில் இருந்த அளவு காந்தி முதலியவைகளைக் காட்டிலும், திரேதாயுகத்தில் கொஞ்சம் குறைந்துவிட்டது. திரேதாயுகத்திலிருந்த அளவு காந்தி முதலியவைகளைக்காட்டிலும் துவாபரயுகத்திற் குறைந்துவிட்டது. துவாபரயுகத்திலிருந்த அளவு காந்தி முதலியவைகளைக் காட்டிலும் இக்கலியுகத்தில் குறைந்துவிட்டது. ஆகையால் இவ்விதமாய் யுகந்தோறும் ரத்தினங்களின் அளவும், காந்தியும், விலையும் குறைந்தே வருகின்றன. ஒவ்வொருயுகமும் முடிந்து மறுயுகம் தோன்றும்போது ஒரு தேசத்திலிருந்து மற்றொரு தேசத்தில் ரத்தினங்கள் உண்டாவதற்குக் காரணம் இந்திரனுடைய மகிமையேயாகும்.

ஒருமனிதன் ஒரு வஜ்ரத்தின் குணத்தையும், குற்றத்தையும் நன்றாய்த்தெரிந்து ஆலோசித்து, தகுந்த விலை மதிப்பிடுவானாகில் அவனுக்கு அசுவமேதயாகஞ்செய்வதனால் உண்டான புண்யமும், கீர்த்தியும் உண்டாகும். அவன் வைரக்கற்களின் குணத்தையும், குற்றத்தையும் நன்றாய்க் கற்றுக்கொள்ளாமல் தாறுமாறாக விலை ஏற்படுத்தி ஜனங்களை ஏமாற்றுவானாகில், அவனுக்கு பலதுன்பங்கள் நேரும்.

முன்சொன்ன பிராமணஜாதி ரத்னங்களிலும், க்ஷத்திரிய ஜாதி ரத்னங்களிலும், வைசியஜாதி ரத்னங்களிலும், சூத்திரஜாதி ரத்னங்களிலும், புருஷரத்னம் என்றும், ஸ்திரீரத்னம் என்றும், நபும்ஸக ரத்னம் என்றும், மூன்று பிரிவுகள் உண்டு.

1. மிகப்பெரிய உருவமுடையதாயும், நல்ல ஒளிபொருந்தியதாயும், o இவ்விதம் வட்டவடிவமுடையதாயும் உறுதியாயும் இருக்கிற ரத்னங்களுக்குப் புருஷரத்னம் என்றுபெயர். புருஷரத்னங்களில் ::: இவ்விதமான புள்ளிகள் குறுக்கேயும் நெடுக்கேயும் இரா,

2. சிற்சில இடங்களிற், முன் சொல்லிய சிறிய புள்ளிகள் இருக்கும் ரத்னங்களுக்கு ஸ்திரீரத்னம் என்றுபெயர். மிகவும் அழகும் காந்தியும் பொருந்திய புருஷர்களும், மாதர்களும் இவ்வித புருஷ ஸ்திரீ ரத்னங்களை ஆபரணங்களில் இழைத்துக் கொள்ளலாம். அதனுல் மிகுந்த சுபமுண்டாகும்.

3. த்ராஸ என்னும் தோஷமுடையதாயும், காக்கையின் கால் போன்ற சிறுகோடுகளோடு (ரேகைகள்) கூடியதாயும், சிறியதாயும், பலபுள்ளிகளை யுடையதாயும், நல்லகாந்தி வீசாமல் மழுங்கியதாயும் இருக்கிற ரத்னங்களுக்கு நபும்ஸகஜாதி ரத்னங்கள் என்றுபெயர். இங்குச் சொன்ன அடையாளங்களை வைத்துக்கொண்டு ரத்னங்களின் மூன்று பிரிவுகளையும் அறிந்துகொள்ளவும்.

ரத்னங்களை அணிந்துகொள்வதனுல் உண்டாகும் பிரயோசனம்.

குணம்பொருந்திய புருஷரத்தினங்கள் யாருடையவீட்டில் இருக்கிறதோ, அவனுக்கு தர்ம-அர்த்த-காம-மோக்ஷம் (அறம் பொருள் இன்பம் வீடு) என்னும் நான்குவிதபலனும் நல்லகீர்த்தியும் சுகமும் உண்டாகும்.

முன்சொன்ன குணமுள்ள ஸ்திரீரத்னங்கள் எவனுடைய வீட்டிலிருக்கின்றனவோ, அவனுக்கு நல்ல பெண்களும் புத்ர பௌத்திரர்களும் மற்றுமுள்ள செல்வமும் சுகமும் உண்டாகும். எவனுடைய வீட்டில் முன்சொன்ன நபும்ஸக ரத்னங்கள் இருக்கின்றனவோ, அவனுக்குத் தரித்திரமும் வறுமையும் பலக்குறைவும் உண்டாகும்.

ஆகையால் எல்லோரும் நபும்ஸக ரத்னங்களை நீக்கி மற்ற இரண்டுவித ரத்னங்களையே அவசியம் அடையவேண்டும் என்று சொன்னர்.

ரத்னபரீக்ஷை:—தோஷமில்லாமல் குணம்பொருந்திய ரத்னங்களை நன்றாய்ப் பரீக்ஷித்து தமது சக்திக்குத் தகுந்தபடி ஸம்பாதித்து வைத்திருக்கவேண்டும்.

வைரம்.

—:*:—

கிருதயுகத்தில் கலிங்க தேசத்திலும், கோசல தேசத்திலும் வைரம்முதலிய ரத்னங்கள் உண்டாயின, திரேதாயுகத்தில் இம

யமலையிலும் மதங்கமலையிலும் நவரத்னங்கள் தோன்றின. துவாபரயுகத்தில் பௌண்டரி புரத்திலும், சௌராஷ்டிர தேசத்திலும் நவரத்னங்கள் தோன்றின. கலியுகத்தில் ஹிராகரம் என்னுமிடத்திலும், சௌபானம் என்னுமிடத்திலும் நவரத்னங்கள் உண்டாகின்றன. கிருதயுகத்தில் உண்டான ரத்னங்கள் வலாஸுரனுடைய சரீரத்திலிருந்து முன்சொன்ன இடங்களில் தோன்றின. திரேதாயுகத்தில் உண்டான ரத்னங்கள் வஜ்ராயுதத்தனிடம் உண்டாகி, முன்சொன்ன இடங்களில் காணப்பட்டன. துவாபரயுகத்தில் உண்டான ரத்னங்கள் பலி என்னும் இந்திரதனுஸ்ஸிலிருந்து பிறந்து முன் சொன்னவிதங் காணப்பட்டன. கலியுகத்தில் உண்டாகும் ரத்னங்கள் எல்லாம் ஹீரகத்திலிருந்து உண்டாகி விளங்குகின்றன.

இவ்விதம் சொன்ன பலவகைப்பட்ட ரத்னங்களுக்கும், ஐந்து குணங்களுண்டு; ஐந்துவித தோஷங்களுமுண்டு; ரத்னபரீக்ஷை தெரிந்தவர்கள் எல்லாரும் எல்லா ரத்னங்களுக்கும் நீரோட்டம் என்னும் நிழல்தான் முக்கியகுணம் என்று சொல்லுவார்கள்.

ஐந்து குணங்கள் வருமாறு:—(1) ஆறுமூலை யுடையதாயிருத்தல், (2) கனமில்லாமல் நற்காந்தியுடன் கூடியிருத்தல், (3) மேடு பள்ளமில்லாமல் எட்டுமூலை யுடையதாயிருத்தல், (4) காந்தியுடன் கூடி நுனி கூர்மையாயிருத்தல், (5) நல்ல பளபளப்பாகிய காந்தியுடன் நிர்மலமாயிருத்தல் என்பனவாம்.

ஐந்து தோஷங்கள் வருமாறு:—(1) இயற்கையாகவே காந்தியில்லாமல் ஒளிமழுங்கியிருத்தல், (2) முழுவதும் சிறு புள்ளிகள் நிறைந்திருத்தல், (3) குறுக்கேயும் நெடுக்கேயும் பெரியகோடுகள் ஓடி இருத்தல், (4) த்ராஸதோஷ முடையதாயிருத்தல், (5) காக்கையின் கால்போல் குறிகாணுதல் என்பனவாம்.

முன்சொன்ன நீரோட்டம் வெண்மை, சிவப்பு, பொன், கருமை ஆகிய நான்குவித வர்ணமுடையதா யிருக்கும். முன் சொல்லிய பிராமணஜாதி ரத்னங்கள், வெண்மை நிறமாயிருக்கும். க்ஷத்ரியஜாதி ரத்னங்கள் சிவப்பு நிறமாயிருக்கும். வைசியஜாதி ரத்னங்கள் பொன்நிறமாய் இருக்கும். (மஞ்சள் நிறமாயிருக்குமென்று சிலர் சொல்லுவார்கள்.) சூத்ரஜாதி ரத்னங்கள் கருமை நிறமா யிருக்கும். இவ்விதம் ஜாதிமுறைகளுக்குத் தகுந்தபடி வர்ணங்களை நிச்சயித்துக்கொள்ளவும்.

முன்சொன்ன தோஷமில்லாமல் குணங்களுடன்கூடிய பிரா்மணஜாதி ரத்தினங்களை அணிந்துகொண்டால் யாகம் செய்த பலனும், தானம் முதலியன செய்த பலனும், தா்மசிந்தையும், சுகமுமுண்டாகும். சகலகாரியஜயமும், இஷ்டசித்தியும் உண்டாகும். நல்லகுணமுள்ள க்ஷத்திரியஜாதி ரத்னமானது எவனுடைய வீட்டிலிருக்கிறதோ அவனுக்கு நல்லகல்வியும், மிக்கசெல்வமும், ஸந்தானமும், கீர்த்தியும் உண்டாகும்.

நல்லகுணமுள்ள வைசியஜாதி ரத்னங்களை அணிந்துக்கொண்டால் தனதான்ய விருத்தி உண்டாகும். பிறருக்கு உதவிபுரிந்து தானும் சுகமாய் வாழ்வான். கூடியவரையில் குணம்பொருந்திய சூத்ரஜாதி ரத்னங்களை அணிந்துகொண்டால் அற்பபோகமும் மலினமான சுகமும் உண்டாகும். அவனுக்குப் புலி கரடி சிங்கம் முதலியவற்றால் பயம் உண்டாகும். சூத்ரஜாதி ரத்னங்களில் ஒரத்தில் கோணவடிவமாயுள்ளதை அணிந்தால் ஏதாவது வியாதியின் தொந்தரவு அவனுக்கு உண்டாகிக்கொண்டே யிருக்கும். நடுவில் கோணமுடைய சூத்ரஜாதி ரத்னங்களையணிந்தால் அவனுக்கு அக்கினி பயம் உண்டாகும்.

முன்பு ஸகலரத்னங்களுக்கும் 5 வித தோஷம் என்று சொன்னோமல்லவா? அதாவது (1) காந்திவீசாமல் இயற்கையாய் மங்கியிருத்தல், (2) புள்ளியிருத்தல், (3) குறுக்கும் நெடுக்கும் பெரிய ரேகை, (4) த்ராஸம் (5) காக பதம் என்று ஐந்துவித மல்லவா? அதில் முதலாவதான மலம் என்கிற மங்கியிருத்தல் தோஷம் ஒரேவிதம்தான். இரண்டாவதான புள்ளி என்பது நான்குவிதம். (1) புள்ளி, (2) சுழி, (3) மேலும் கீழும் சுழி சுற்றல், (4) திணையரிசி போல் உருவமிருத்தல் என்று இந்த 4 வித பேதங்கள் உண்டு. இவ்விததோஷம் வயிரக்கற்களிலிருந்தால் அந்த ரத்னம் மிகவும் கெடுதியை விளைவிக்கும். இங்கேசொன்ன இந்த புள்ளியானது ரத்னங்களின் நடுவில் வட்டமாயும் சிவப்புநிற முடையதாயும்தோன்றும். இதுபோலவே சுழியும் சிவந்தநிறமாயிருக்கும். மூன்றுவதாகச்சொன்ன கீழ்மேலும் சுற்றலுக்குப் பரிவா்த்தம் என்று பெயர். இதுவும் சிவப்பாகவே தோற்றும். திணை அரிசியின் உருவம்போலிருத்தல் என்பது மாத்திரம் திணை அரிசிபோலவே வா்ணமுடையதாகத்தோன்றும். இதில் சிவந்த நிறமுடைய சுழி என்பது பிரதக்ஷிணமாயிருக்கும், பரிவா்த்தம் என்று மூன்றுவதாவது அப்பிரதக்ஷிணமாயிருக்கும் என்று இவைகளின் பேதமறிந்து கொள்ளவும்.

இவ்விதமாகச் சொல்லப்பட்ட தோஷங்களில் புள்ளியிருந்தால் செல்வத்தையும், ஆயுளையும் குறைத்துவிடும். 2 - வதான சிவந்த சுழியிருந்தால் எப்போதும் ஏதாவது பயமுண்டாகிக் கொண்டேயிருக்கும் 3-வதான பரிவர்த்தம் என்ற தோஷமிருந்தால் அதை யணிபவருக்கு நோய் ஏதாவது உண்டாகும். 4-வதுதான தினையரிசி உருவம்போல் இருப்பது சிவப்பு நிறமாயிருந்தால் அதை யணிபவருக்கு யானை, குதிரை, பசு முதலியவைகளின் மரணத்தை திடீரென்று பார்க்கும்படி நேரிடும். இதே தினையரிசி உருவம்போல் இருப்பது மஞ்சள்வர்ணமாயிருந்தால் குலம் நாசமாக்கும். இதே தினையரிசி உருவம்போல் இருக்கும் அடையாளமானது வெண்மை நிறமாயிருந்தால் செல்வமும் வயதும் மேன்மேல் விருத்தியடையும் என்று இவ்விதமாய் புள்ளியினுடையவும் தினையரிசி உருவத்தினுடையவும் குணதோஷங்களை நன்ருய் விவரித்துச் சொல்லப்பட்டதை அறிந்துகொள்ளவும்.

ரேகை என்னும் கோடு விஷயம் இனி சொல்லப்படுகிறது.

அதாவது சகலவித ரத்னங்களிலும் 1 இவ்விதமாய் வலதுபக்கமாய் வளைந்திருக்கும் ரேகைநலம். 2 இவ்விதமாய் இடதுபக்கமாய் இருந்தால் அந்த ரத்னத்தை யணிந்துகொள்பவருக்கு எப்போதும் ஏதாவதுபயம் நேரிடும். அந்த ரேகையே 3 இவ்விதமாய் நடுவில் கொஞ்சம் துண்டித்ததுபோல் காணப்பட்டால் அதை யணிந்துகொள்கிறவனுக்கு மோஹமயக்கத்தை உண்டுபண்ணும். சாதாரணமாய் 4 இவ்விதமாய் தடிபேறின ரேகையா யிருநதால் கள்ளர் அஸ்திரம் கத்தி முதலியபயம் உண்டாகும். ரத்னத்தை ஒருபக்கமாய்சாய்த்துக் கண்ணுக்கு எதிரில் பார்த்தால் இருபக்கத்திலும் 5 இவ்விதம் பிளந்ததுபோல் தெரியும் ரேகைதான் சேத ரேகை என்று சொல்லப்படும். வைரக்கற்களில் காந்தியில்லாமல் ஸாதாரணமான 6 இவ்வித ரேகையிருந்தால் அந்த ரத்னம் உறவினர்களின் நாசத்தை உடனே விளைவிக்கும். பிளவுரேகை மோகமயக்கத்தை உண்டுபண்ணும். த்ராஸம் என்பது பயத்தையே கொடுக்கும். எந்தரத்னங் காக்கையின்கால் உருவம்போன்ற குறி தோன்றுகிறதோ, அதுமரணத்தை உடனே உண்டுபண்ணிவிடும் அல்லது, ஸகல செல்வத்தையாவது பலவிதத்தில் நீக்கிவிடும். நீரோட்டம் என்னும் காந்தியானது நுனியில் பிளந்துபோனுலும் ரத்னமே பிளந்துபோயிருந்தாலும் அது கெடுதியின் பொரு

ட்டேயாகும். ஆகையால், இங்குக்கூறிய தோஷங்களில்லாத ரத்தினங்களே அணியத்தக்கன. மேற்சொன்ன காந்தியில்லாதனவும் தோஷங்கள் இல்லாதனவும் ஆகிய ரத்னங்கள் நல்லனவும் அல்ல; கெட்டனவுமல்ல" என்று இவ்விதம் வைரக்கற்களின் குணதோஷங்கள் சொல்லப்பட்டன. ஈயைப்போலவும், பக்ஷிகளின் சிறகு போலவும், நீர்க்குமிழ்போலவும் இருந்தாலும் தோஷந்தான்.

வைரம் உற்பத்தியாகுமிடங்கள்.

1. வேணா நதியின்கரையில் உண்டாகும் ரத்னம் தோஷமில்லாமல் வெண்மைநிற முடையதாயிருக்கும். 2. கோசல தேசத்தில் உண்டாகும் வைரமானது காட்டுவாழைப் புஷ்பத்தின் நிறம் போல் இருக்கும். 3. ஸௌராஷ்டிர தேசத்தில் உண்டாகும் வைரமானது கொஞ்சம் சிவப்பாயிருக்கும். 4. ஸார்ப்பக தேசத்தில் உண்டாகும் வயிரக்கற்கள் கறுப்பு நிறமாயிருக்கும். 5. இமயமலையில் உண்டாகும் வைரக்கற்கள் வெண்மையும் கொஞ்சம் சிவப்புநிறமும் கலந்து காந்திவீசும். 6. மதங்கபர்வதத்தில் உண்டாகும் வைரமானது கொஞ்சம் வெண்மைநிற முடையதாயிருக்கும். 7. கலிங்கதேசத்தில் உண்டாகும் வைரமானது, நல்ல மஞ்சள்நிறமுடையதாயிருக்கும். 8. பௌண்டிரதேசத்தில் உண்டாகும் வைரமானது நல்ல கறுப்புநிறமாகவே இருக்கும். வைரங்கள் காந்தாரம், தெலுங்கு இவ்விருதேசத்துக் கனிகளிலும் உற்பத்தியாகின்றன.

வைரத்திற்கு முக்கியதேவதை சுக்கிரன்.

எந்த எந்த வைரக்கற்கள் வெண்மை நிறத்தை யுடையனவாயும், ஆறுகோணங்களை யுடையனவாயும், இருக்கின்றனவோ அவற்றிற்கு இந்திரன் தேவன்.

வண்டுபோன்ற கறுப்புநிறமுள்ளனவும், பாம்பின்படம்போன்ற வடிவமுள்ளனவுமாகிய கற்களுக்கு யமன்தேவன்.

சிறிது நீளமாயும், பொன் வர்ணமாயும் உள்ள வைரக்கற்களுக்கு விஷ்ணு தேவனாவார்.

தேர்த்தட்டுபோன்ற உருவமுள்ளனவும் * கன்னிகாரபுஷ்பம்போன்ற, நிறமுள்ளனவுமாகிய கற்களுக்கு வருணன் தேவனாவன்.

பிறைபோல் இவ்விதம் முக்கோண வடிவமுடையனவும், புலிக்கண்போன்ற பிரகாசமுடையனவுமாகியவற்றிற்கு அக்கினிதேவனவன்.

தினையரிசிபோன்ற உருவமுள்ளனவும், இடையில் சிறிதுபருத்தும், அசோகம்பூவின் நிறமுள்ளனவாயும் இருக்கின்ற வற்றிற்கு வாயுதேவனவன்.

வைர பரீக்ஷை.

"மாமணி மரபுக் கெல்லாம் வைரமே முதன்மைச் சாதி
யாமென வுரைப்பர்நூலோ ரதிகம்யா தென்னி லேனைக்
காமரு மணிகட் கெல்லாந் தமரிடு கருவியா மத்
தூமணி தனக்குத் தானே துளையிடுங் கருவி யாகும்."

எவ்வித கெட்டியான லோகங்களையும், இதர ரத்னங்களையும் வைரத்தால் அறுத்துவிடலாம்; ஆனல் வைரத்தை அறுப்பதற்கு வைரம் தான் கருவி.

வைரத்தை (ஆஸிட்) திராவகதில் போட்டுச் சற்றுநேரம் பொறுத்து எடுத்தால் ஒளி மங்காமலும், நிறை குறையாமலும், அப்படியே இருக்கும். நிஜவைரமானல் பிரகாசமும் அதிகரிக்கும். வைரத்தின் மேல் கத்தி, கத்திரி முதலிய ஆயுதங்களால் ரேகைகள் இழுக்கமுடியா.

உயர்ந்த வைரம் காத்திரத்திற்குத் தகுந்தபடி கனமில்லாமல் (லேசாக) இருக்கவேண்டுமென்று சோமராஜா சொல்லுகிறுர்.

வைரத்தைக் கீழ்நோக்கிச் சாய்த்துப் பிடித்தால் கீழ்ப்புறத்திலேயே ஒளி பிரதிபலிப்பனவும், மேல்நோக்கிச் செல்லாத ஒளியையுடையனவுமே மிக்க உயர்ந்தன.

வைரங்களை அணிவதின் பலன்கள்.

புத்திரர்களைப்பெறவேண்டிய ஸ்திரீகள் தோஷமில்லாத நல்ல வைரங்களை அணியவேண்டும். சுத்தமான வைரங்களை அணிவதால் சகல காரியங்களிலும் ஜெயமுண்டாகும், லக்ஷ்மிகடாக்ஷம் உண்டாகும். சத்துரு பயம், இடிபயம், விஷபயம் இவைகளும் உண்டாகாது.

தோஷமில்லாத வைரங்களை அணிந்துகொள்ளுவதனால் பற்பல வியாதிகள் நீங்குகின்றனவென்று வைத்திய நிபுணர்கள் கொண்ட கொள்கைகளை பாவப்பிரகாசத்திலும், ரஸ ரத்நஸமுச்சயத்திலும் பார்க்கக் காணலாம்.

ஏனைய ரத்தினங்களின் நிறை முதலான கூறப்படும் இடத்தில் வைரத்தின் நிறையும் கூறுவோம்; அங்குக் கண்டுகொள்க.

மரகதங்கள்.

—:*:—

பச்சைக்கிளி, மூங்கில் இலை, வாழை இலை ஆகிய இவைபோன்ற பச்சைநிற முடையனவற்றிற்குக் 'கருடப்பச்சை' எனவும், காட்டுவாழைப் புஷ்பம்போல் கொஞ்சம் வெண்மையும் மஞ்சளும் கலந்து, காந்தி வீசிக்கொண் டிருப்பனவாகிய கற்களுக்கு 'மரகதம்' எனவும்பெயர் என்று ரஸரத்ன ஸமுச்சயத்திலும், பிருஹத் ஸம்ஹிதையிலும் சொல்லப்படுகின்றன.

மரகதம் உண்டாகும் இடம்.

மேற்சொன்ன கற்கள் துருக்கிதேசத்திலும், ஸமுத்திரநடுவிலுள்ள தேசங்களிலும், சமுத்திரக் கரையைச் சமீபித்திருக்கும் தேசங்களிலும் மழை மிகுதியாகப்பெய்யுந் தேசங்களிலும் மரகதங்கள் மிகுதியாக உண்டாகின்றன. கருடனுடைய இறகிலிருந்து உண்டான மரகதத்திற்குக் 'கருடப் பச்சை' என்று பெயர்.

இக்கற்களுக்கு 7-வகையான தோஷங்களும், 5-வகையான குணங்களும், 8-வகையான நீரோட்டங்களும் உண்டென்று மஹரிஷிகள் கூறுகின்றனர்.

தோஷங்கள்.

1. வழவழப்பில்லாமல், சொரசொரவென் றிருத்தல். இப்படிப்பட்ட கற்களை அணிந்தால் பற்பலவியாதிகள் உண்டாகும்.

2. சொரி, சிரங்குகளைப்போல் கொப்புளித்திருத்தல். இவ்விதமான ரத்னங்களை அணிந்துகொள்பவன் அகாலத்தில் ஆயுதங்களால் இறந்துபோவன்.

3. பாஷாணதோஷம்; இத்தோஷத்தையுடைய கற்களை யணிந்தால், நெருங்கின பந்துக்களில் முக்கியமானவர்கள் பலர் திடீரென்று இறந்து விடுவார்கள்.

4. மரகதங்களுக்கு இயற்கையாக இருக்கவேண்டிய ஒளி இராமல் வேறுநிறம் மாறுபட்டிருத்தல்; இதற்கு 'மலினதோஷம்' என்று பெயர். இவ்வித தோஷத்தோடுகூடிய கற்களை அணிபவர்களுக்குக் காது செவிடாய்விடும்.

5. பருக்கைக் கற்கள்போல் முறுக்கிக்கொண்டிருத்தல்; இவ்வித ரத்னங்களை அணிந்தவனுக்குப் புத்திரசோகம் உடனே உண்டாகும்.

6. நல்லகாந்தி வீசாமல், 300, 400, வருஷகாலத்திற்கு மேல் வயது சென்றதாயிருத்தல். இவ்வித தோஷத்தையுடைய ரத்னங்களையணிந்தால் புலி, கரடி முதலிய மிருகங்களால் துன்பம் உண்டாகும்.

7. மஞ்சளும் கறுப்பும் சேர்ந்த வர்ணம் (கல்மாஷ வர்ண) மாயிருத்தல்; இவ்வித தோஷத்தையுடைய ரத்தினத்தை யணிந்தால் அணிந்துகொண்டவர்கள் உடனே இறந்துவிடுவார்கள்.

குணங்கள்.

1. நிர்ம்மல காந்தியுடன்கூடி இருத்தல். 2. அதிக நிறையுடையதாயிருத்தல். 3. மிகவும் வழவழப்பா யிருத்தல். 4. ரத்னத்தின் நடுவில் தூள்முதலியன படிந்திருப்பதுபோல் இல்லாமல் சுத்தமாயிருத்தல். 5. மிகவும் சிவப்புக்காந்தியை வீசுதல். இவ்விதமான ரத்தினங்களை அணிந்துகொள்பவனுக்குப் பலவகையான மங்களங்களும், செல்வவிருத்தியும் உண்டாகும்.

கருடப்பச்சைக்கு உரிய தோஷங்கள்.

1. கரடுமொரடா யிருத்தல். 2. மைபோலவும் மேகம்போலவும் காந்திவீசுதல். 3. வெண்மை நிறமாயிருத்தல். 4. கனமில்லாமல் இருத்தல். 5. சொரி சிரங்குடன் இருத்தல். 6. முடிச்சுக்கட்டி இருத்தல். 7. பட்டை பட்டையான கோடுகளோடிருத்தல். 8. பிளவுபட்டிருப்பதுபோல் த்ராஸம் இருத்தல்.

அலரி, எலுமிச்சை இவற்றின் இலைகள்போன்ற நிறத்தோடிருத்தலும், மயிலின் தோகைபோலும், பனித்துளிகளுடன்கூடிய

த்ரமரை இலைபோலும் இருப்பனவும் தோஷங்களேயாம். இங்கு க்கூறிய தோஷங்களோடு கூடியகற்களை அணியலாகாது; அணிந்தால் மிக்க துன்பம் உண்டாகும்.

கருடப்பச்சையின் குணங்கள்.

1. பெரிய உருவமாகவே இருத்தல், 2. பசுமையான அறுகம் புல்லைப்போல் இயற்கையாக ஒளி மிகுந்திருத்தல், 3. மிக்கபளபளப்புடன் இருத்தல், 4. மிக்க வழவழப்பா யிருத்தல், 5. மிகுந்த கனமுடையதா யிருத்தல். இவைகள் குணங்களாகும்.

நீரோட்டம்.

1. மயிற் ரேகைபோல் ஒளிவீசுதல். 2. வண்டுக்களின் இறகைப்போல் காந்தி வீசுதல். 3. பாம்பின் தலையில உள்ள மாணிக்கம்போன்ற ஒளியை வீசுதல். 4. வேலம்பாசிபோன்ற ஒளியை வீசுதல். 5. மினிமினிப் பூச்சிபோல் காந்தியை வீசுதல். 6. இளங்கிளியின் இறகைப்போல் ஒளிவீசுதல். 7. மூங்கில் இலைபோன்ற நிறத்தோடிருத்தல் 8. காட்டு வாகைப்பூ அறுகம்புல் துளசி இதழ் தாமரையிலை ஆகிய இவைகளைப்போல் பச்சை நிறமாயிருத்தல் என 8-வகைப்படும்.

"வேலம்பாசிபோல் ஒளி வீசுவனவும், சிவந்த நிறமுடையனவுமாகிய மரகதங்களின் விலை மதிக்கத்தக்கனவல்ல என்று ரத்தினபரீக்ஷை தெரிந்த வித்துவான்கள் சொல்லுகின்றனர்" என்று அகஸ்தியமஹாரிஷி மரகத பரீக்ஷையைப்பற்றி, ஸ்மிருதி சாரத்தில் கூறியிருக்கிறுன்ர்.

அணிவதின் பலன்கள்.

இப்படிப்பட்ட கற்களை அணிந்து கொள்பவர்களுக்குச் சுகமும், ஆரோக்கியமும், செல்வமும், சரீரத்திற்கு அழகியகாந்தியும், பலமும், உண்டாகும்; அக்கினி மந்தத்தையும், கால் வீக்கத்தையும், வாதரோகங்களையும், விஷதோஷங்களையும், வாந்தி முதலானவற்றையும் நிவிர்த்திசெய்யும்.

மரகதத்திற்கு அதிதேவதை புதன்.

மாணிக்கமும், பத்மராகமும்.

——:o:——

உற்பத்தியாகும் இடம்.

மாணிக்கக் கற்கள் விகாணிதேசத்திலும், சோணாநதியிலும், சமுத்திரத்திலும், பர்மாதேசத்தில் ஓடும் ஐராவதி நதியிலும், சிங்களத்தீவிலும், களாபுரத்திலும், தும்பர தேசத்திலும், தெலுங்கு தேசத்திலும் உற்பத்தியாகின்றன.

இவற்றுள் தெலுங்கு தேசத்தில் உண்டாகும் மாணிக்கம், அசோகந்தளிர்போல் சிவந்திருக்கும். இதற்குச் சுகந்திக மாணிக்கம் என்று பெயர். தும்பர தேசத்தில் உண்டாகும் மாணிக்கம் நீலமாய் இருக்கும். இதற்கு நீலகந்தி என்று பெயர். சிங்களத்தீவில் உண்டாகும் மாணிக்கம் நல்ல சிவப்பாய் இருக்கும். இதற்குப் பத்மராகக் கற்களென்று பெயர். களாபுரத்தில் உண்டாகும் மாணிக்கம் கொஞ்சம் மஞ்சள் நிறமா (பொன் நிறம்) யிருக்கும். இதற்குச் குருவிந்தம் என்று பெயர். சிங்களத்தீவில் உண்டாகும் மாணிக்கம்; மிகவும் உயர்ந்தஜாதியாகும். தும்பரதேசத்தில் உண்டாகும் மாணிக்கம் நிக்ருஷ்டம். மற்ற தேசங்களில் உண்டாகும் மாணிக்கம் நடுத்தரமானவை.

இலட்சணம்.

விகாணிதேசத்தில் உண்டாகும் மாணிக்கம் சிவந்தநிறமுடையதாயிருக்கும். இதற்குப் பத்மராகம் என்று பெயர். சோணா நதியில் உண்டாகும் ரத்னம் நீலநிறமாய் இருக்கும் இதற்கு நீலகந்தி என்று பெயர்.

சிவந்த நிறமுடைய மாணிக்கம் தாமரைப் புஷ்பத்தின் இதழ்போல் சிவந்த நிறமுடையதாயும், நல்ல நீரோட்டம் வீசிக்கொண்டும், மிகவும் பளபளப்பாயும், பார்வைக்கு அழகாயும் இருக்கும். இப்படிப்பட்டவை முதன்மையானது.

நீலகந்தி மாணிக்கம் நீலோற்பல புஷ்பம்போல் நல்ல ஆழ்ந்த நீலநிறம் உடையதாயிருக்கும். அவ்வித நீலநிறத்தினுள் கொஞ்சம் சிவப்பு நிறமுடைய நீரோட்டமும் வீசும். இவ்வித நீரோட்டம் இந்திரநீலக் கற்களுக்குக் கிடையாது. இதுதான் இந்திரநீலத்திற்கும், நீலகந்திக்கும் வித்தியாசம் என்று ரத்தின பரீக்ஷகர்கள் சூட்சுமமுமாய் அறிந்துகொள்ளவும். இப்போது சொன்ன பத்மராக மாணிக்கமும், நீலகந்தி மாணிக்கமும் தான் மாணிக்க ஜாதியில் மிகவும் உயாநதன எனவும் பூமியின் சாரத்துக்கு தக்கபடி மாணிக்கத்தின் உயர்வு அதிகப்படுமெனவும் அறிந்துகொள்ளவும்.

மாணிக்கங்களில் 8-வகை ஜாதிபேதமும், 4-வகைக் குணங்களும், 16-வகை நீரோட்டங்களும் உண்டென்று மஹரிஷிகள் கூறுகின்றனர்.

நீரோட்டம்.

இதிற் கூறப்படும் 16-வகை நீரோட்டங்களும் தோஷமுள்ளனவே; 1. மாணிக்கத்திற்கு இயற்கையாயுள்ள சிவப்புக் காந்தியுடன் ஒருபக்கத்தில் மற்றொருகாந்தி கூடியிருந்தால் அது கெடுதிகளை உண்டாக்கும். 2. இயற்கையான நிறத்துடன் வேறு இரண்டு நிறம் சேர்ந்திருந்தால் அதை அணிபவர்களுக்குத் திடீரென்று பந்துசேதனம் உண்டாகும். 3. இரண்டு ரூபமாகவும், இரண்டடியாகவும், இருக்குமாயின் அதை அணிந்துகொள்பவர்களுக்கு ஏதாவது அவமானம் நேரிடும். 4 பிளவு கண்டிருக்கும் ரத்தினத்தையும் துளையையுடைய ரத்தினத்தையும் அணியலாகாது. அணிந்தால் பசு உறவினர்கள் இவர்களுக்குத் தீங்குநேரும். 5. மாணிக்கக் கற்களில் பால்துளி பட்டதுபோல் காணப்படுமேயாகில் அதற்குப் பூண்டுபததோஷம் என்றுபெயர். அது மிகவும் கெட்டது; ஆதலால் இதை அணியலாகாது. 6. மாணிக்கத்தில் தேன் துளிபோன்ற நிறம் காணப்பட்டால் அதற்குக் காமலதோஷம் என்று பெயர். இவ்வித மாணிக்க்த்தை அணிந்தால வயதும் செல்வமும் பெருமையும் குறைந்துவிடும். 7. சிவப்புநிறம் இல்லாமல் மங்கலாயிருப்பதை அணிந்தால் தனதான்ய செல்வமும் போய்விடும். 8. பழுப்பு நிறம்போல் இருக்கும் மாணிக்கமும் கெடுதலாகும். 9. மின்னல்போல் பளபளவென்று ஒளிவீசும் மாணிக்கம் பயத்தையுண்டாக்கும். 10. மிகவும் கறுப்பா யிருத்தல், நுரையுடன் கூடியிருத்தல், இவைகளும் தோஷங்களேயாம்.

கூறாதுவிட்ட ஆறுவித நீரோட்டங்களும் மேற் கூறியவற்றின் பேதங்களே யாம்.

குணங்கள்.

1. ஒரேவிதமானகாந்தி எங்கும்கூடிப் பரவியிருத்தல். 2. ஒருவிதமான அழுக்கும் இல்லாமல் மிகவும் சிவந்தகாந்தி வீசுதல். 3. நிர்ம்மலமாய் இருத்தல். 4. பிளவு முதலியவை இல்லாமல் அழகாய் மிகுந்த நிறையுடன் கூடியிருத்தல் என குணம் நான்கு வகைப்படும்.

பத்மராக லக்ஷணம்.

பத்மராகங்களின் குணங்களாவன:—செந்தாமரைப் புஷ்பத்தின் இதழ்போன்றிருத்தல் 2. மின்மினிப் பூச்சிப்போல் காந்தி வீசுதல். 3. நக்ஷத்திரம்போல் ஒளிவீசுதல், 4. அக்கினி ஜ்வாலை போல் காந்திவீசுதல், 5. மாதுளைப் புஷ்பம்போலும், மாதுளை முத்துப்போலும், காந்திவீசுதல், 6. பட்டுப்பூச்சியின் நிறம்போல் இருத்தல் என்பனவாம். அணிபவர்களுக்கு பத்மராகம் மிகவும் நன்மையே தரும்.

ஜாதி பேதங்கள்.

மிகவும் சிறந்த பத்மராகங்கள் பிராமணஜாதி எனப்படும். இப்பத்மராகத்தில் குருவிந்த ரத்னமென்பது க்ஷத்திரிய ஜாதி. சௌகந்திகம் என்பது வைசியஜாதி, நீலகந்தி என்பது சூக்திர ஜாதி. முன்சொன்னபடி பத்மம் முதலிய 10-வித காந்திகள் பிராமணஜாதி பத்மராகங்களுக்கு உண்டு.

க்ஷத்திரியஜாதி பத்மராகக் கற்களுக்கு 8-வித வர்ணங்கள் உண்டு; அவையாவன:—. பலாச புஷ்பநிறம், 2. பந்தூக புஷ்பநிறம், 3. செம்பாத்தி நிறம், 4. குன்றுமணி நிறம், 5 முயலின் ரத்தம், போன்றநிறம் 6. ஸிந்தூரநிறம், 7. உலக்கடை இரும்புநிறம்.

வைசியஜாதி பத்மராகக்கற்களுக்கு 6-வித நிறம் உண்டு; அவையாவன:—1. அரக்குநிறம், 2. கோகிலக்கண்ணின் நிறம், 3. பஞ்சுப்பூவின் நிறம், 4. பஞ்சவர்ண புஷ்பநிறம், 5. உலக்கடை நெருப்பு நிறம், 6. அசோக புஷ்பநிறம்.

சூத்திரஜாதி பத்மராகக் கற்களுக்கு 4-வித நிறம் உண்டு; அவையாவன:—1. குஸூம்பா புஷ்பநிறம், 2. கோவைப்பழநிறம் 3. மருதாணிப்பூ நிறம், 4. காவிக்கல்லின் நிறம் என.

குணங்கள்.

முன் வைரக் கற்களைப்பற்றிச் சொல்லும்பொழுது கனமில்லாது லேசாயிருத்தல் அதன்குணம் என்று சொன்னோம்; ஆனால் பத்மராகக்கற்கள் கனமாகவே இருக்கவேண்டும். இவ்வித பத்மராகக் கற்களிற் சிலவற்றிற்கு கனம் அதிகப்பட அதிகப்பட நீரோட்டம் மிகுந்துவீசும். இவை உத்தமரத்னமென்று சொல்லப்படும். சிலவற்றிற்குக் கீழ் நோக்கியே நீரோட்டம் வீசும். அவைகளைக்

கெட்ட ரத்னஙகளென்றே சொல்லவேண்டும். சிலவற்றிற்குப் பக்கங்களின் மூலமாயும் காந்திவீசும்; இதை நடுத்தர பத்மராகமென்று கருதவேண்டும்.

தோஷங்கள்.

பத்மராகங்களுக்கு 6-வித தோஷங்கள் உண்டு; அவையாவன:—எந்தப் பத்மராகக் கற்களில் அப்ரக நிறம்போன்ற வர்ணங்கள் தோற்றுகின்றனவோ அதற்கு அப்ரக ரத்னமென்றுபெயர். இதை அணிந்துகொள்பவருக்கு ஆயுளும் செல்வமும் குறைந்துவிடும்; எந்தப் பத்மராகம் கரடு மொரடாய் இருக்கின்றனவோ அவற்றிற்குக் கரட்டு ரத்னம் என்றுபெயர். அதை அணிந்துகொண்டால் தரித்திரம் வந்து வசிக்கும் தேசத்தைவிட்டு நீங்கும்படி ஸம்பவிக்கும்.

த்ராஸதோஷம்.

பத்மராகம் என்னும் கெம்பை, பார்வைக்கு நேராய்ச் சாய்த்துப் பார்த்தால் இரண்டு ரத்னம் சேர்ந்தாற்போல் தோன்றும்; அதற்குத் தான் த்ராஸதோஷம் என்று பெயர். இவ்வித த்ராஸ தோஷமுடைய கெம்புகளை அணியலாகாது. அணிந்தால் புலி - கரடி - சிங்கம் - நாய் முதலியவற்றால் பயமுண்டாகும். பிளவுபட்டிருக்கும் ரத்தினஙகளை அணியலாகாது, அணிந்துகொண்டால் திடீரென்று அகாலத்தில் மனைவியாவது புத்திரனாவது இவ்விருவருமாவது இறந்து போகும்படி நேரும். எந்தக் கெம்பின் கர்ப்பத்தில் மண் இருப்பதுபோல் ரத்னபரீக்ஷை அறிந்தவர்களுக்குத் தோன்றுகிறதோ அவற்றிற்கு, மண் கெம்பு என்றுபெயர் அப்படிப்பட்டவற்றை அணியலாகாது; அணிந்துகொண்டால் உடம்பில் தோல் சம்பந்தமான சொரி, சிரங்குமுதலிய பல நோய்கள் உண்டாகும்.

உயர்ந்த குணங்கள்.

"உள்ளிருந் தெழுந்து புறம்பு நின் றெரியு
மளவாத் திருமணி யளித்த லானும்."

என்பது கல்லாடம்.

பலவகைப் பத்மராகங்களும்கெம்புக்களைக்காட்டிலும் 1. அதிக நிறையுடையதா யிருத்தல், 2. மிகுந்த வழவழப்புடன்கூடி அதிக

காந்திவீசுதல், 3. மிகுந்த சிவப்புநிறமுடைத்தாயிருத்தல், 4. நான்குபக்கங்களிலும் நீரோட்டம் வீசுதல், 5. கையில் புல் முதலியவற்றை வைத்துக்கொண்டு, கெம்புகளை அதற்கு எதிர் முகமாய்க் காட்டினால் அந்தப்பொருள் அந்த ரத்னத்தின் பிரதி பிம்பமாகத் தோற்றல் என்று ஐந்து குணங்கள் முன் சொல்லப்பட்டன.

அணிவதன் பலன்கள்.

சிவப்பு ரத்தினங்களில் சாதரங்கம் அணிவோர்க்கு அன்னதான பலனும், அசுவமேதயாக பலனும் கிடைக்கும்; குருவிந்தத்தை அணிவோர் ராஜயோகம் அடைவார்கள். சௌகந்திகத்தை தரிப்போர் மிக்கசெல்வம், கீர்த்தி அடைவார்கள். நீலகந்தி ரத்தினத்தை தரிப்போர் பசு, பால், செல்வம் இவைகளைப்பெற்று சுகமடைவார்கள்; உயர்ந்த பத்மராகங்களை அணிவதால் பலவகைப் பிணிகள் அணுகா.

நல்ல உயர்ந்த மாணிக்கக் கற்களையும், பத்மராகக் கற்களையும் அணிந்தால் செல்வமும், ஆயுளும் வளரும்; பலவகைக் கர்மவினைகளும் தீரும்; பூதம், பேய், பிசாசு முதலியவற்றால் பயம் உண்டாகமாட்டா. மாணிக்கத்தை மருந்துகளிலும், ரஸாயனங்களிலும் உபயோகித்தால் அக்கினிபுஷ்டியை உண்டுபண்ணிச் சரீரத்திற்கும் ஆரோக்கியத்தை கொடுக்கும். க்ஷயரோகம், வாதரோகம், கபரோகம் ஆகிய இவைகளை நீக்கும். பல மருந்துகளில் உபயோகிக்கும் வகைகளையும் பிரயோசனங்களையும், பாவப் பிரகாசத்திலும் ரஸரத்ந சமுச்சயத்திலும், காண்க.

மாணிக்கத்திற்குத் தெய்வம் சூரியன்.

புஷ்பராகம்.

—:*:—

உண்டாகும் இடங்கள்.

இமயமலையிலும், விந்தியமலையிலும். ஸ்படிகக்கற்கள் உற்பத்தியாகும் இடங்களிலும், தாமிரனி நதியிலும், சிங்களத்தீவிலும், மற்றும் சில இடங்களிலும் புஷ்பராகங்கள் உற்பத்தியாகின்றன.

லக்ஷணம்.

புஷ்பராகக் கற்கள் வெண்மையான புஷ்பம்போலவும், கர்ணிகாபுஷ்பத்தின் நிறம்போலவும், பளபளப்புடன் நெருப்புப் பொறிபோல் காந்தி வீசிக்கொண்டிருக்கும். இவ்வித கற்களை ஸ்ரீ பிரமதேவர் மேன் மேலும் விருத்தி பண்ணிக்கொண்டு வருகின்றார்.

புஷ்பராகத்தில் புள்ளி, தூசி இல்லாதனவும், கனமான த்ராஸதோஷம் இல்லாதனவுமாயுள்ள கற்கள் மிக உயர்ந்தன.

குற்றங்கள்.

1. இயற்கையாயுள்ள வெண்மை நிறமில்லாமல் மஞ்சள் நிறமாயிருத்தல், 2. பலவர்ணமா யிருத்தல், 3. கரடுமொரடாயிருத்தல், 4. பச்சையாயிருத்தல், 5. துளை, கோடு, புள்ளி, த்ராஸம் ஆகிய இவற்றுடன் கூடியிருத்தல், எனத்தோஷங்கள் பலவகைப்படும்.

அணிவதன் பலன்கள்.

மேற்சொன்ன தோஷங்களில்லாதனவும், மிகுந்த ஒளியுடையனவுமான புஷ்பராகங்களை அணிந்தால் தேக ஆரோக்கியமும், அழகும், சுகமும், செல்வமும் அதிகரிக்கும்.

இந்தப் புஷ்பராகக் கற்களை மருந்துகள் செய்வதற்கும் உபயோகிக்கிறார்கள். "அக்னிபுஷ்டியை உண்டுபண்ணி ஜீரணத்தைக் கொடுக்கும், தாகத்தை அடக்கும், வயிற்றுப்பூச்சி, வெளிப்புழுகு, கபம் ஆகிய இவை முதலியவற்றை நீக்கும். 80-விதமான வாத ரோகத்தையும் கண்டித்து தோல் தோஷத்தையும் நீக்கும்" என்று இவ்விதமாய் ரஸரத்ன ஸமுச்சயம் என்னும் கிரந்தத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

புஷ்பராகத்திற்குத் தேவதை-குரு.

வைடூர்யம்.

—— —:*:— ——

உண்டாகும் இடங்கள்.

வைடூரியக் கற்கள் இளாவிருத கண்டத்து மலையின்சார்பிலும், மேற்குத்தேசங்களிலும், கோரக்ஷ தேசத்திலும், மகத தேசத்திலும், பாரஸீக தேசத்திலும், சிங்களத்தீவிலும், மலய மலையிலும், திரிகூடமலையிலும், வேறுபல சிறு தீவுகளின் நடுப் பூமியிலும் ஏராளமாய் உண்டாகின்றன. இதைத் தவிரமுன்பு பிரளயகாலத்தில் நான்கு சமுத்திரமும் அதிககோபத்துடன் அலைகளாற் சீறிப் பூமியையழித்தபோது ஆகாயத்தில் மேகங்கள் கடூரமாய்ச் சப்தித்தன, சப்தித்த அம்மேகங்களிலிருந்தும் இது உண்டாயிற்று என்பர்.

லக்ஷணம்.

மழைக்காலம் சென்றபின்பு ஆகாயத்தில் ஸஞ்சரிக்கும் மேகம்போல் ஒருவிதமான வெண்மை நிறம் உடையதாய் அல்லது சாதாரண புகையின் நிறம்போன்ற நிறமுடையதாய்க் கொஞ்சம் கறுப்பு நிறமும், கொஞ்சம் வெண்மை நிறமும், கலந்தாற்போன்றிருக்கிற ரத்தினத்திற்கு வைடூரியம் என்று பெயர்.

குணங்கள்.

மூங்கில் இலையின் வர்ணம், மயில் கழுத்தின் நிறம் ஆகிய இவற்றைப்போன்ற நிறமுடையனவும் மிகவும் கனமுடையனவும், தோஷமில்லாமல் நல்ல காந்தியுடன் கூடியவையுமான கற்களுக்கு உத்தமமான வைடூரிய ரத்தினமென்று பெயர்.

நீரோட்டம்.

வலதுபக்கமாய் நீரோட்டம்வீசும் வைடூரியம் பிராமணஜாதி! காந்தி இடதுபக்கமாய் வீசும் வைடூரியம் க்ஷத்திரியஜாதி! பின்பாகத்தில் நீரோட்டம் வீசுவது வைசியஜாதி! கீழ்கீழாக மங்கலாய்க் காந்தி வீசுவது சூத்திரஜாதி! இப்படி நான்குவகையான வைடூரியக் கற்களில் முன்சொன்ன மூன்று வகையான காந்திபொருந்தியிருந்தால் அது உயர்ந்த வைடூரியமென்று கருதவேண்டும். முன்சொன்ன 3-வித நிறமில்லாமல் வேறு வகையான நிறமிருந்தால் அதைக்கெட்டதென்றே சொல்லவேண்டும்.

தோஷங்கள்.

முன் சொல்லியபடி இயற்கை நிறமில்லாமல் கறுப்பு நிறமுடையதாயும், அல்லது வேறு நிறமுடையதாயும், பிசுக்குடையதாயு , கனமில்லாததாயும், சொர சொரப்பாயும் இருக்கிற வைடூரியக்கற்கள் நல்லதல்ல; இவ்வித தோஷங்களிலே சிவப்பு நிறமுடைய வைடூரியக்கற்களைக் கட்டாயம் நீக்கிவிடவேண்டும்.

அணிவதன் பலன்கள்.

இவ்வித வைடூரியத்தைப் பல ஆபரணங்களில் தரித்துக் கொள்பவர் சுகத்தையும், பலபாக்கியங்களையும் அடைவார்கள்.

ஔஷதங்களில் உபயோகித்தால் நல்ல ரத்தத்தைப் பரவச் செய்யும்; அக்னிபுஷ்டியை தரும்; மற்றும் இதைப்பற்றிய விவரத்தை வைத்திய நூல்களிற் காண்க.

வைடூரியத்திற்குத்தேவதை கேது.

கோமேதகம்.

——:*:——

உண்டாகும் இடங்கள்.

முன்பு தேவர்களாற் சொல்லப்பட்ட பலாசுரனுடைய உடம்பு மேதஸ் எங்கெங்கு இடங்களில் பூமியில் வீழ்ந்தனவோ அந்தந்த இடங்களில் உண்டாகின்றன.

லக்ஷணம்.

தேன்போன்ற நிறமும்,கோமூத்திரத்தின் நிறமும், பொன் வர்ணமும் இதற்குரிய லட்சணமாம்; கோமேதக ரத்தினங்கள் கெட்டியாய் அதிகநிறை உடையனவாய் வழவழப்பாய் இருத்தல் நலம்.

காந்தி மழுங்காமல் ஒருவித தோஷமுமில்லாமல் நீரோட்டம் ஓயாது வீசுமானால் அது மிகவும் நல்லதென்று கருதவேண்டும். மூட்டுப்பூச்சியின் நிறம்போன்ற நிறமுடையதாக கோமேதகத்தில் ஒரு ஜாதி உண்டு. அதுமிகவும் நல்லது! அதை எல்லா வைத்திய முறைகளிலும் உபயோகிக்கலாம்.

தோஷங்கள்.

1. இயற்கையாய் முன்சொல்லப்பட்ட கோமூத்திரகாந்தி வீசாமல் மஞ்சள் நிறமாயிருத்தல், 2. ஒருவித காந்தியும் நன்றாய் வீசாமல் மங்கலாயிருத்தல், 3. பற்பல காந்திவீசுதல், 4. மிகவும் லேசாகயிருத்தல், 5. உருவம் அழகு இல்லாமல் சுருட்டிக்கொண்டு இருத்தல், 6. புடலம்பூப்போல் படலதோஷமிருத்தல் இவ்வித தோஷமுடைய கோமேதகத்தை அணியலாகாது. பசுமாம்ஸத்தின் நிறம்போன்ற நிறமுடையதாய் வழவழப்பாய் நிர்மலகாந்தி வீசிக்கொண்டு பிளவு, கோடு, பிந்து, த்ராஸம் இவைகள் இல்லாமல் இருக்கிற கோமேதக ரத்னங்களையே அணியவேண்டும்.

கோமேதகங்களை ஆபரணமாய் அணிந்துகொண்டால் சரீரத்திற்குச் சுகமும் ஆனந்தமும் உண்டாகும். பிணியும்பாபமும் நீங்கிவிடும்.

கோமேதகத்திற்குத் தெய்வம் ராகு.

இந்திர நீலம்.

——:o:——

உண்டாகும் இடங்கள்.

பத்மராகக்கற்களில் நீலமானஜாதி ஒன்று உண்டு; அதற்குத்தான் இந்திரநீலக்கற்கள் என்று பெயர். சிங்களத்தீவின் நடுவிலும், ஐராவதி நதியிலும், கங்கையிலும், குரு க்ஷேத்திரத்திலும், நெடுநாள் குளத்தில் இருக்கும் தாமரைக்கிழங்கின் நடுவிலும் சிவந்த பத்மராகக் கற்களும், கறுப்பானஇந்திரநீலக் கற்களும் உண்டாகின்றன.

ஜாதி.

பத்மராகக் கெம்புகளில் பிராமணஜாதி, க்ஷத்திரியஜாதி, வைசியஜாதி, சூத்திரஜாதி என்று நான்கு பிரிவுகள் உண்டு.

லட்சணம்.

நீலரத்தினங்களில் நான்கு ஜாதியுண்டு. அதாவது, கொஞ்சம் வெண்மைநிறம் கலந்திருப்பது பிராமணஜாதி நீலரத்தினம்;

கொஞ்சம் சிவப்புகாந்தி கலந்திருப்பது க்ஷத்திரியஜாதி; கொஞ்சம் வெளுப்பும் மஞ்சள்நிறமும் கலந்திருப்பது வைசியஜாதி; முழுமையும் கறுப்பாயிருப்பது சூத்திரஜாதி; இந்த நீலரத்தினத்திற்கு இயல்பாகக் காந்தி நீலநிறமாகும். தோஷமற்ற இவ்விதமான நீலரத்னத்தை யணிபவர்களுக்கு விசேஷசெல்வமும் சுகமும் உண்டாகும்.

தோஷங்கள்.

முன்சொன்ன இந்திரநீலக்கற்களில் கற்பாறையின் நிறம் போல் புள்ளிகாணப்படுமானல் அதற்குக் கல்தோஷமென்று பெயர். இவ்வித ரத்னத்தை யணியலாகாது, அணிந்துகொண்டால் வெகுசீக்கிரத்திற் பலவகைக் கஷ்டத்தையும் நஷ்டத்தையு மடையும்படி நேரிடும்.

பிரிவு.

நீலரத்தினத்தில் ஜலரத்தினமென்றும், இந்திரநீல ரத்னமென்றும் இரண்டுவிதம் உண்டு. இவைகளுக்குள் இந்திரநீலக் கற்களே மிகவும் நலம்.

இந்திரநீலம் என்பது மிகவும் பளுவையுடையதா யிருக்கும், ஜலநீலமென்பது லேசாகயிருக்கும், இவ்வித ரத்தினத்தில், எந்த ரத்தினத்தில் வயிற்றில் இயற்கையான நீலகாந்தி வீசாமல் சிவப்பு காந்தி வீசுகிறதோ, எந்த நீலரத்தினம் முடிச்சு கட்டிக்கொண்டிருக்கிறதோ;எந்த ரத்னம் கரடுமொரடாயிருக்கிறதோ, அப்படிப் பட்ட ரத்னத்தை அணியலாகாது; புள்ளி-பிந்து, பிளவு இவைகள் இருக்கும் ரத்தினத்தையும் அணியலாகாது. இந்த இந்திரநீல ரத்தினத்திலும், ஒருவித தோஷமில்லாமல் ஒரேகாந்தி யிடைவிடாமல் வீசிக்கொண்டிருப்பது நல்லது.

குணங்கள்.

1. லேசாக யிருத்தல், 2. கனமாயிருத்தல், 3. கறுத்த காந்தி வீசுதம், 4. ஒரேகாந்தி வீசுதல், 5. ஒருகாந்தியே பலவிதமாய் வீசுதல்போல் தோன்றக்கூடிய நீரோட்டமிருத்தல், 6. வழவழப்பா யிருத்தல், ஆகிய குணங்கள் இந்திரநீல ஜாதியில் உண்டு.

7. கறுப்பு காந்தியுடன் கூடியதாயும், கொஞ்சம் சொரசொரப்பாயும், கொஞ்சம் பிசுக்கு உடையதாயு மிருக்கும். இவ்வித

நீலரத்தினத்தின்நடுவில் இந்திரன் தனுசுபோல் பலவிதகாந்தி வீசு மேயானல், இதற்கு மஹாநீல ரத்னமென்றுபெயர்; இது கலியுகத்தில் கிடைப்பதரிது. இதன் விலைமிக அதிகமாகும்.

இந்திரநீலக்கற்களின்காந்தி எப்படியிருக்குமென்ருல் நீலோற்பலபுஷ்பத்தின் காந்திபோலவும் மயில்கழுத்து காந்திபோலவும் சிவபிரானுடையகழுத்து காந்திபோலவும் மஹாவிஷ்ணுவின் சரீர காந்திபோலவும் வண்டுகளின் இறகு காந்திபோலவும் இருக்கும். இவ்வித வர்ணங்களில் ஏதாவது ஒரு வர்ணத்துடன்கூடி தோஷமில்லாமலிருக்கும்.

அணிவதன் பலன்.

இந்திர நீலக்கற்கள் எவனுடைய வீட்டி லிருக்கின்றனவோ; அவனுக்குச் செல்வமும் வயதும் பலமும் கீர்த்தியும் மேன்மேலும் வளரும்.

பரீக்ஷை.

இந்திரநீலக்கற்களை எப்படிப் பரீக்ஷைசெய்து பார்க்கவேண்டுமென்ருல் ஒருபாத்திரத்திற் பசுவின்பாலை ஊற்றி அதில் இந்த இந்திரநீலக் கெம்பை வைத்தால் அந்தக் கெம்பின் காந்தியினல் அந்தப் பாத்திரத்திலிருக்கும் பாலெல்லாம் நீலமாகவே தோற்றும். அப்படித் தோன்றுவது தான் முதல்தரமான இந்திரநீலக் கெம்பு இந்திரநீலக் கற்களை யணிந்துக்கொண்டால் ஸ்ரீகிருஷ்ணபகவான் பிரஸன்னமாகி நீண்டவயதையும் பெருஞ் செல்வத்தையும் ரோகமில்லாத நற்சுகத்தையும் கொடுப்பார்'' என்று இவ்விதமாய்ப் பத்மராக இந்திர நீலக்கற்களின் குணதோஷங்களைப்பற்றி அறிஞர்கள சொல்லுகின்றனர்.

இந்திர நீலக் கற்களுக்குத்தெய்வம் சனி.

முத்து.

உண்டாகும் இடங்கள்.

முத்துக்களில் ஜலமுத்துக்கள் என்றும், ஸ்தல முத்துக்கள் என்றும், இரு பிரிவுகள் உண்டு. முன்பு இந்திரன் வஜ்ராயுதத்தினுல் வலாசுரனுடைய சரீரத்தைப் பிளக்கும்போது அவனுடைய பற்கள் முத்துக்களாயின. அவைகள் 13 இடங்களிற் சிதறிவிட்டன: அவை சங்கத்திலும், மீன் தலையிலும், கரியமேகத்திலும், ஸாமுத்ரிகை சாஸ்திரப்படி அங்க அவயவங்களமைந்த ஸ்திரீகளின்கழுத்திலும், மூங்கிலிலும், பன்றியின் கோரைப்பற்களிலும், ஸர்ப்பத்தின் படத்திலும், யானையின் மத்தகத்திலும், கொக்கின் கழுத்திலும், கரும்பின் கணுக்களிலும், வெண்மையானசாலிஎன்னும் நெற்கதிரிலும், முத்துச்சிப்பியிலும், சிங்கத்தின்கையிலுமேயாம்.

சங்கத்தில் உண்டாகும் முத்து வெண்மையாய் மாடப்புருவின் முட்டையளவு பருமன் இருக்கும். மீனின் தலையில் உண்டாகும் முத்தானது பாதிரி புஷ்பவர்ணம்போல் இருக்கும், மேகத்தில் உண்டாகும் முத்து சூரியன்போன்ற நிறத்தாயிருக்கும். ஸ்திரீகளின் கழுத்திலும், புருஷர்கள் கையிலும், கொக்கின்கழுத்திலும் உண்டாகும் முத்துக்கள் இக்கலியுகத்தில் கிடைத்தலரிது; மூங்கிலில் உண்டாகும் முத்துமிகவும் நல்லது; அது மழைக்கல்போன்ற நிறமுடையதா யிருக்கும். பன்றியின் கோரைப்பற்களி லிருந்து உண்டாகும்முத்து, சிவப்பாயிருக்கும். பாம்பின்படத்திலுண்டாகும் முத்து, நீலநிறத்துடன் கூடியிருக்கும்; யானையின்மத்தகத்திலிருந்து உண்டாகும் முத்து, மஞ்சள்நிறம் கலந்துவீசும். கரும்பின்கணுவில் உண்டாகும் முத்துமஞ்சள்நிறம் கலந்துவீசும்; நெற்பயிரிலிருந்து உண்டாகும் முத்து பசுமைநிறமுடையதா யிருக்கும் முத்துச்சிப்பியிலிருந்து உண்டாகும் முத்துசந்திரன்போல் வெண்மையாயிருக்கும் என்று முத்துக்கள்பிறக்கும் 1'-வித இடங்களும் நிறமும் கூறப்பட்டன.

முத்துச் சிப்பியிலிருந்தும், சங்கத்திலிருந்தும் தான் அதிகமாய் முத்துகள் இப்பொழுது உண்டாகின்றன; மிகுதியாக உற்பத்தியாகிறபடியாலும் நல்லகுணங்கள் அதிகயாய் இருக்கிறபடியாலும் சிப்பி முத்துக்களே சிறந்தன.

உண்டாகும் தேசங்கள்.

சிங்களத்தீவு, பாலோகம், சௌராஷ்டிர தேசம், தாமிரபரணிநதி, குபேரதேசம், பாண்டியதேசம், ஆர்வாடகதேசம், பர்ப்பரம், பாரசீகதேசம் ஆகிய இவ்விடங்களில் உற்பத்தியாகின்றன.

லக்ஷணம்.

சிங்களத்தீவில் உண்டாகும் முத்துக்கள் அன்னப்பறவை போல் வெண்மையாயும், பெரிதாயும், நல்ல நீரோட்டம் வீசிக்கொண்டும் இருக்கும்.

தாமிரபரணியில் உண்டாகும் முத்துக்கள் கொஞ்சம் சிவப்புக்காந்தியுடன், வெண்மைக்காந்தியும் கூடியிருக்கும்.

பரலோகத்தில் உண்டாகும் முத்துக்கள் கறுப்பும் மஞ்சளும் கலந்த நிறமுடையதாய் வட்டமாயிராமல் மேடுபள்ளம் உள்ளதாயிருக்கும்.

சௌராஷ்டிரதேசத்தில் உண்டாகும் முத்துக்கள் பசுவின் வெண்ணெய் நிறமுடையதாயும், மிகப்பெரிதாயும், மிகச்சிறியதாயும் இராமல் நடுத்தரமாக இருக்கும்.

பாலோகதேசத்தில் உண்டாகும் முத்துக்கள் அதிக கனமும், நல்லநீரோட்டமும் வெண்மைக்காந்தியும் பொருந்தி இருக்கும்

இமயமலையில் உண்டாகும் முத்து லேசாயும், விவர்ணமாயும், பெரிய உருவமுடையதாயும் இருக்கும்.

பாண்டியநாட்டில் உண்டாகும் முத்துக்கள் கனமில்லாமல் லேசாயும், கறுப்பும் வெளுப்பும் கலந்தும் மிக்ககாந்தியுடன் வேப்பங்கொட்டை நெல்லிக்காய் இவற்றின் உருவம்போல் பிளவு உடையதாய் இருக்கும்.

ஆர்வாடக தேசத்தில் உண்டாகும் முத்துக்கள் கொஞ்சம் மஞ்சள்நிறம் உடையதாய் நிர்ம்மலமாய் அழுக்கில்லாமல் காந்தி வீசும்.

பர்ப்பரதேசத்தில் உண்டாகும் முத்துக்கள் கரடு மொரடாயும், கொஞ்சம் காந்தி உடையதாயும் இருக்கும்.

பல பிரிவுகள்.

முத்துச் சிப்பிகள் பலவற்றுள்ளும் ருக்மிணீ என்று ஒரு வகை உண்டு. முத்துச் சிப்பிக்களில் உண்டாகும் முத்துக்களுக்கு முத்து என்றும் முக்தாபலம் என்றும் பெயர். முத்துச் சிப்பியில் உண்டாகும் முத்துக்கு "பிறமுத்து" என்றுபெயர். ருக்மிணீ என்னும் முத்தில் ஒருவிதமான அழுக்கும் இயற்கையாகவே இராது. இது நிர்ம்மலமாயும், பளபளப்பாயும், குங்குமம்போல் சிவந்த காந்தி உடையதாயும் ஜாதிக்காய் அளவு பருமனுயும் இருக்கும். ரத்னபரீக்ஷையில் தேறினவர்கள் இம்முத்து மதிப்பிடமுடியாத விலை யுள்ளதென்று சொல்வார்கள். அரசர்களும், தனவான்களும், புண்ணியம் செய்தவர்களும் இதை அணிந்துகொள்ளும் பாக்கியத்தைப் பெறுவார்கள்.

ஐராவதம் என்னும் தேவயானையினது வம்சத்திற் பிறந்த யானைகளின் சிரசில் உண்டாகும் முத்துக்கும் திருவோண நக்ஷத்திரம் கூடிய திங்கட்கிழமையில் உண்டாகும் முத்துக்கும், உத்தராயணத்தில் சூரியகிரகணத்திலும், சந்திரகிரகணத்திலும் உண்டாகும் முத்துக்களுக்கும் "பத்திரமுத்து" என்று பெயர். இவ்வித முத்துக்கள் கிடைப்பது அருமை; கிடைத்து அணிந்துகொண்டால் அவர்களுக்கு ஜயமும், ஐசுவரியமும், சந்தானமும், சுகமும் மிகுதியாக உண்டாகும்.

மேலேயுள்ள வாயுமண்டலத்தில் ஏழாவது பாகத்தில் மேகம் சஞ்சரிக்கும்போது முத்து உண்டாகும். தேவர்கள் அவற்றைக் கொண்டுபோய் விடுவார்கள். அம்முத்துக்கள் மின்னல்போல் பளபளப்பாய் இருக்கும்.

வெள்ளிப் பாத்திரத்தில் முத்தை வைத்தால் உடனே அவ்விடத்தில் மழைபெய்யும். இம்முத்து சர்ப்பத்தினிடம் உண்டாயிற்றென்று அறிந்துகொள்ளவும். இவ்விதமுத்து தரித்திரத்தை நீக்கிச் செல்வத்தையும், விசேஷஜயத்தையும் உண்டாக்கும். இது மதிக்கமுடியா விலைபெற்றது.

கர்ப்பூர நிறம்போலவும், ஸ்படிகம் நிறம்போலவும், கொஞ்சம் மேடுபள்ளமுடையதாயிருக்கிற முத்து மூங்கிலிலிருந்து உண்டாயிற்றென்று அறிந்துகொள்ளவும்.

குணங்கள்.

இவ்விதமான நல்முத்துக்களில் ஒருவிதமான அழுக்கும் இல்லாமல் நல்ல வெண்மைக்காந்தி வீசிக்கொண்டும் லாவண்யம் என்கிறநீரோட்டம்வீசிக்கொண்டும், வழவழப்பாயும் o இவ்விதம்குண்டாகவும் இருக்கிற முத்துக்கள் மிகவும்நல்லது, சிலமுத்துக்களில் மற்றப்பக்கங்களில் இருப்பதைக்காட்டிலும், வெண்மைக்காந்தி நடுவில்வீசும், அதிக கனமாயும் வழவழப்பாயும் பளபளப்பாயும் இருக்கும்; மார்பில் தரித்துக்கொண்டால் மிகவும் குளிர்ச்சியாகவும் இருக்கும்; சந்திரகிரணங்களும் அமிர்தபிந்துக்களும் உடம்பிற்பட்டால் எப்படியிருக்குமோ, அப்படிப்பட்ட சுகத்தைக் கூடியதானசில முத்துக்கள் உண்டு. ஆகையால் இவ்வித முத்துக்களை நன்றாய்ப்பரீக்ஷைசெய்து ஒவ்வொருவரும் அணியவேண்டும்.

தோஷங்கள்.

எல்லா முத்துக்களுக்கும் நான்கு பெரிய தோஷங்களும், ஆறு சாதாரண தோஷங்களும் ஆகப் பத்துவித தோஷங்கள் உண்டு 1. எந்த முத்தில் ஏதாவது ஒருபக்கத்தில் கறுத்த பள்ளக்குறி தோன்றுகிறதோ, அந்த முத்தை அணிந்துகொள்ளக்கூடாது: அணிந்துகொள்பவருக்கு வெள்ளைக் குஷ்டம் உண்டாம். 2. எந்த முத்தில் மீன்கண்போல் பிரகாசம் தோற்றுகிறதோ, அதற்கு "மத்ஸ்யாக்ஷ தோஷம்" என்றுபெயர். இவ்வித தோஷத்தோடுகூடிய முத்துக்களை அணியலாகாது. அணிந்தால் அணிபவனுடைய புத்திரனுக்குக் கெடுதிநேரும் 3. காந்தியில்லாமல் பலவருஷகாலம் சென்று கிழமாய் இருக்கும் முத்துக்களையும் அணியலாகாது. அதற்குக் "கிழமுத்து" என்றுபெயர். அதை அணிந்துகொண்டால் செல்வம் நீங்கித் தரித்திரமே அதிகமாகிவிடும். 4. பவழம்போல் மிகவும் சிவந்த முத்தைத் தரிக்கலாகாது. இவ்வித தோஷமுடைய முத்தை அணிந்துக்கொண்டால் உடனே மரணம் நேரும். இதிற் சந்தேகமே இல்லை. 5. எந்த முத்தின்மேல் — இவ்விதமான கோடுகள் தோன்றுகின்றனவோ, அதற்கு "த்ரிவிரத தோஷம்" என்றுபெயர். இந்தத் தோஷமுள்ள முத்துக்களையணிதல் நலமன்று. 6. எந்த முத்தானது வட்டமில்லாமல் இவ்விதமாய்ச் சதுரமாயிருக்கிறதோ, அதற்குச் "சர்ப்படதோஷம்" என்றுபெயர். இவ்வித தோஷங்களையுடைய முத்துக்களை அணிந்

துக் கொள்பவருக்கு எப்போதும் கெட்டகீர்த்தியே உண்டாகும் 7. எந்த முத்துக்களானவை இக்கோண வடிவமாயிருக்கின்றன வோ அவ்விதமுத்துக்களை அணிந்துகொண்டால் அணிந்துகொள் பவருக்குச் சுபங்களெல்லாம் நீங்கிவிடும். 8. எந்த முத்துக்கள் நீண்டிருக்கின்றனவோ, மிகவும் இளைத்ததுபோல் காணப்படுகின் றனவோ, அவ்வித முத்துக்களை அணிந்துக் கொள்ளலாகாது. அணிந்துகொண்டால் புத்திகலக்க முண்டாகும். 9. எந்த முத்து க்கள் ஒருபக்கத்தில் சப்பையாய் உள்ளடங்கி யிருக்கின்றனவோ அவ்விதமுத்துக்களும் அணியத்தகுந்ததன்று. அணிந்தால் குடும் பத்தில் சந்தோஷ முண்டாகாது. 10. குண்டாக இல்லாமலும், சொரி சிரங்குபோல் நசுநசுவென்று தோன்றுகிற முத்தையும், உடைந்துபோன முத்தையும், பிளவுபட்ட முத்தையும் அணியலா காது, அணிந்தால் தான் அடைந்திருக்கும் வேலைக்குக் கெடுதி நேரிடும்.

முன் சொன்ன 4-வித மஹாதோஷமுடைய முத்துக்களை ஒருபொழுதும் அணியலாகாது. பின்பு சொன்ன 6-வகை ஸாதா ரணதோஷமுள்ள முத்துக்களையும் நீக்கிவிடவேண்டும். கண்களு க்கு அழகாய்த் தோற்றாமல் கொஞ்சம் விலையுள்ள முத்துக்களை யும, கடுக்கன், வங்கி, மாலை முதலிய ஆபரணங்களோடு அணிய லாகாது.

நக்ஷத்திரம்போல் நல்ல வெண்மைக் காந்தி வீசும், "ஸாதா ரம்" என்னும் முத்துக்களையே "நல்லமுத்து" என்று சொல்லு வார்கள். முன்சொன்ன 10-வித தோஷமில்லாமல் நிர்மலமாயும் வெண்மையாயும் தராசில்வைத்து நிறுத்தால் அதிக பளுவுடைய தாயும் உள்ள முத்துக்களை ஒருவன் அணிந்தால் அவனுக்கு வய தும் செல்வமும் அதிகமாய் வளரும். சகலபாபமும் நீங்கிச் சந் தோஷமும் சரீரபுஷ்டியும் உண்டாகும்.

1. மேடு பள்ளமாய்ச் சுருங்கியிருத்தல், 2. கரடுமொரடாயி ருத்தல், 3. வெண்மையான நீரோட்டம் வீசாமல் இருத்தல், 4. நீரோட்டம் வீசாமல் கறுத்திருத்தல், 5. ஸாதாரணமாய்ச் சிவந் திருத்தல், 6. காந்தி வீசாமல் மங்கலாயிருந்து ஒருபெரிய உப்புக் கல்போற் றோன்றுதல், 7. ஒருபாதி வெளுத்தும் மற்றப்பாதி வேறுவர்ண முடையதாயிருத்தல், 8. சொரி சிரங்குடையதாயிரு

த்தல், 9. முடிச்சு முடிச்சாகக் கட்டிக்கொண்டிருத்தல். என ஒன்பதுவித தோஷங்கள்முத்துக்களுக்கு உண்டு; இப்படிப்பட்ட தோஷத்தோடுகூடிய முத்துக்களை ஒருபொழுதும் அணியலாகாது; மருந்துமுறைகளிலும் உபயோகிக்கலாகாது.

நீரோட்டம்.

முத்துக்களில் 1. மஞ்சள்நிறம், 2. மதுரநிறம், 3. வெண்மை நிறம், 4. நீலநிறம், என நான்கு வகையான நீரோட்டம் உண்டு. தோஷமில்லாமல் மஞ்சள் நிறமுடைய முத்தை அணிந்துக்கொண்டால், செல்வம் அதிகமாய் வளரும். தோஷமில்லாமல் மதுரநிறமுடைய முத்தை அணிந்துக்கொண்டால், புத்தியும், சுகமும் அதிகமாய் வளரும். தோஷமில்லாமல் வெண்மை நிறமான முத்தை அணிந்தால் நல்லகீர்த்தியும், நீலநிற முத்தை அணிந்தால் செல்வமும் அழகும் விருத்தியாகும்.

தேவதைகள்.

காயாம்பூப்போன்ற நீலநிறமுடைய முத்துக்குத் தேவன் விஷ்ணு. சந்திரன்போல் நிர்ம்மலமாய் வெண்மைக் காந்திவீசும் முத்துக்களுக்குத் தேவன் இந்திரன். ஹரிதாள வர்ணமுடைய முத்துக்களுக்குத் தேவன் வருணன். கறுப்பு நிறம்வீசும் முத்துக்களுக்குத் தேவன் யமன். நன்றாய்ப்பழுத்த மாதுளம் விதைப்போல் நிறமுடையனவும், குன்றிமணிப்போல் நன்றாய்ச் சிவந்துள்ளனவுமான முத்துக்களுக்குதேவன் வாயு. புகையில்லாமல் எரியும் அக்கினி நிறம்போன்ற முத்துக்களுக்கும், செந்தாமரைப் புஷ்பம்போல் சிவந்த நிறமுடைய முத்துக்களுக்கும் தேவன் அக்கினி.

அணிவதின் பலன்கள்.

நல்ல குணமுடைய முத்துக்களை எவர்கள் ஆபரணங்களாய் அணிந்துகொள்ளுகிறார்களோ அவர்களுக்கு நீண்ட வயதும் செல்வமும் சுகமும் உண்டாகும்என அறிஞர்கள் கூறுகின்றனர்.

முத்து ஹாரங்களின் பெயர்கள்.

400 முத்துக்கள் சேர்ந்த முத்துமாலைக்கு "இந்துச்சந்தம்" என்றுபெயர். இவ்விதமாலை தேவதா விக்ரஹங்களுக்குத் தக்கதாகும். இதில் பாதியிருந்தால் (அதாவது 504 முத்துக்கள் கோர்த்து 2-முழம் நீளமிருந்தால்) "தேவச்சந்தம்" என்றுபெயர். 108-முத்

துக்கள் கோர்த்து 2-முழம் நீளமுள்ள முத்துமாலைக்கும், 81-முத்துக்கள் கோர்த்து 2-முழம்நீளமுள்ள முத்துமாலைக்கு "தேவச்சந்தம்" என்று பெயர். 64-முத்துக்கள் கோர்த்ததற்கு "ரச்மிகலாபம்" என்றுபெயர். 31-வடம் சேர்ந்தமாலைக்கு "குச்சமாலை" என்றுபெயர். 20-வடம் சேர்ந்ததற்கு "அர்த்தகுச்சம்" என்று பெயர். 8-வடம் அல்லது, 6-வடம்சேர்ந்ததற்கு ஹாரம் என்றும் ஹாரபலகம் என்றும்பெயர். 27-முத்துகோர்த்து 1-முழம் நீளமுடைய மாலைக்கு நக்ஷத்திரமாலை என்றுபெயர். இந்த மாலையிலேயே நடுவில் பதக்கமும் ஓரங்களில் குண்டு அல்லது பொன்னுவது இருந்தால் அதற்கு "பணிஸோபானம்" என்று பெயர் அதிலேயே நடுவில் தரளகமணி தொங்கவிட்டிருந்தால் அதற்குச் "சாடுகாரம்" என்றுபெயர். தன் இஷ்டப்படி அநேக முத்துகள் கோர்த்து ஒருமுழநீளம் உடையதாய் ஏற்படுத்திய முத்துமாலைக்கு "ஏகாவளீ" என்று பெயர். நடுநாயக்கமணியிருந்தால் "யஷ்டிமாலை" அல்லது ஏகாவளீயென்று பெயர்.

முத்துக்கு அதிதேவதை சந்திரன்.

பவழம்.

ராமேசுவரத்திற்கு ஸமீபமான ஸேதுவிலும் ஸமுத்திரத்தின்நடுவிலும் சிவந்த நிறமுடைய பழள்க்கொடி உண்டாகிறது, அவ்விதபழவக்கொடியிலேயே ரத்தினமும் உண்டாகும்; ஆனல் அது மிகவும் அபூர்வம்; பழவமானது நல்ல சிவந்த நிறமுடையதாயிருக்கும், ரத்னங்களைப்போல் காந்தி வீசாது. ஒருவிததோஷமுமில்லாத பவழங்கள் அணிபவர்களுக்கு மிகவும் சுபத்தையும் சுகத்தையும் கொடுக்கும்.

தோஷங்கள்.

இயற்கையாயிருக்கவேண்டிய சிவப்பு நிறமில்லாமல் வெண்மையாயிருத்தல் 1. அழுக்கடைந்திருத்தல் 2. கரடுமொரடாயிருத்தல் 3. புள்ளி துளை ஆகிய இவற்றுடன்கூடியிருத்தல் 4. கிளிக்கூட்டையும் பறவைக்கூட்டைபோல் முடிச்சுக்கட்டியிருத்தல், 5. நிறைலேசாயிருத்தல் 6. பழுப்புவர்ணமா யிருத்தல் 7. என்பனவாம். இவ்வித தோஷங்கள் இல்லாத பவழம்மிக்க நன்மையை உண்டுபண்ணும்.

குணங்கள்.

நன்ருய்ப்பழுத்த கோவைப்பழம் நிறம்போலவும், கிளிமூக்கின் நிறம்போலவும், செவ்வரத்தம் பழத்தின் நிறம்போலவும், இருக்கும்பவளம் மிகவும் உயர்ந்தது.

அணிவதன் பலன்கள்.

இவ்வித நல்ல பவழங்களை மாதர்கள் அணிந்துக்கொண்டால் சுகமும் மாங்கலிய சோபையும், நல்ல ஸந்தானமும் உண்டாகும்.

பவழமானது க்ஷயரோகத்தையும் பித்தத்தையும் காசரோகத்தையும் போக்கிவிடும்; அக்கினிபுஷ்டியை உண்டுபண்ணும்; விஷவலியையும் பூதசேஷ்டையையும் அடக்கிவிடும்.

பவழத்திற்கு அதிதேவதை குஜன்.

ஸ்படிகம்.

உண்டாகும் இடங்கள்.

இமயமலையிலும், ஸிங்களத்தீவிலும், விந்தியமலையிலும், மலைச்சாரலிலும் நாநாவிதமான ஸ்படிகக்கற்கள் உண்டாகின்றன. இமயமலையில் உண்டாகும் ஸ்படிகக்கற்கள் சந்திரகாந்திபோல் நிர்ம்மலமாயிருக்கும். இவ்விதமான ஸ்படிகக்கற்களிலேயே சூரியகாந்தக்கற்கள் என்றும் சந்திரகாந்தக்கற்கள் என்றுஇரண்டுவகை ஜாதியுண்டு. சூரியகாந்தக்கற்களின்மேல் சூரியகிரணம்விழுந்தால் உடனே அக்கினியும் ஜலமும்கக்கும். ஆகையால் அவற்றிற்குச் சூரியகாந்திக்கற்கள் என்று பெயர். சந்திரகாந்தக்களின்மேல் சந்திரகிரணம்வீழ்ந்தால் உடனே அதிலிருந்து அமிர்தம்போன்ற சீதளஜலம்பெருகும். ஆகையால் அவற்றிற்குச் சந்திரகாந்தக் கற்களென்றுபெயர்; இவ்விதமான சூரியகாந்தக்கற்களும் சந்திரகாந்தக்கற்களும் இந்தக் கலியுகத்தில் கிடைப்பது அரிது. இவ்விதம் படிகக்கற்களிலேயே மதராந்தி என்று மற்ருெருஜாதி உண்டு. அது விந்தியமலையின் சார்பிலும் தாபினீ என்னும் நதியிலும் உண்டாகிறது. விந்தியமலையில் உண்டாகும் மதகாந்திகற்கள் அசோகந்தளிர்போல் இருக்கும்.

தாபினீ நதியில் உண்டாகும் மதகாந்திக்கற்கள் மாதுளைவிதையின் நிறம்போலிருக்கும். ஸிங்களத்தீவில் உண்டாகும் நீலகந்திகம்போல் கறுப்பாயும் மற்ருெருவிதம் உண்டாகும். முன்சொன்ன பத்மராகக்கற்கள் உண்டாகும் இடத்திலும் இவ்விதமாய்ப் பல நிறமுடைய ஸ்படிகக்கற்கள் உண்டாகின்றன.

ரத்தினங்கள்.

பூமியின் உட்புறத்திலும், மலைகளிலும், ஆறுகளிலும், நீண்ட காலமாய் ஆழ்ந்து பதிந்திருக்கும் சில தாதுக்கள் பலவித சக்திக்களால் ஒளி அடைந்து பல இடங்களில் பற்பல வர்ணங்களுடன் அகப்படுகின்றன. அவைகளின் பிரகாசத்திற்காகவும், அபூர்வமாய்க் கிடைப்பதாலும், அவ்வித தாதுசம்பந்த கற்களை பல்லாயிர வருடங்களாய்ப் பலதேசத்து ஜனங்கள் அவைகள் அகப்படுமிடங்களிலிருந்து பொறுக்கிப் பத்திரப்படுத்தியும், பெருந்தனமாய்ப் பாவித்து அவ்வகளை ஆபரணங்களில்தரித்தும் வருகிறார்கள். அவ்விதகற்கள், பூமியின் சாராம்சத்திற்கு தக்கபடி ஒளியும், கனமும், உறுதியும் அடைகின்றன.

அவ்வகைக் கற்களை பூமியில் சுரங்கங்களை வெட்டி எடுப்பது ஒருவழி; சிலகற்கள் மழையினாலும், இடி இடிப்பதாலும், பூமியிலும மலைகளிலும் பிளவு கண்டிருக்கும் பாகங்களில் மழைத்தாரைகளால் அடித்துக்கொண்டு போகப்பட்டு சிற்சில ஆறுகள் மணலுடன் கலந்தும், ஆற்றோரப் படுகைகளிலும், நதிப்பிராந்தங்களிலும் அகப்படுகின்றன.

உயர்ந்த ரத்தினங்கள், பூகம்பத்தாலும், எரிமலைகள் உள்ள பூமிகளில் பலவித காரணங்களால் உண்டாகும் அதிர்ச்சிகளாலும், உஷ்ணத்தாலும் அதிக உஷ்ணப்பிராந்தியங்களிலும், பூமத்தியரேகைசெல்லும் தேசங்களிலும் அகப்படுகின்றன.

இந்தியா தேசத்திலும், பர்மாவிலும், பிரேசில் தேசத்திலும், லங்கை, போர்னியு, ஆஸ்திரேலியா, தென் ஆபிரிக்கா, ஐரோப்பாவைச்சார்ந்த யூரல்மலை, ஆசியாவிலுள்ள, சைபிரியா சைனாமுதலிய இடங்களில் உயர்ந்த நவரத்தினங்கள், பூமியின் சக்திக்குத் தகுந்தபடி பலவித நிறத்துடன் ரத்தினங்கள் உற்பத்தியாகின்றன.

உயர்ந்த அபூர்வமான பெரிய வைரங்கள் இந்தியதேசத்து விந்தியமலைச்சாரலிலும், கிருஷ்ணா கோதாவரி ஆகிய இம்மஹாநதி தீரங்களிலும், அகப்படுகின்றனவென்று தெரிகின்றது. உலகததில் பிரசித்திபெற்ற வைரங்கள் கோஹினூர், துரைநூர், ஷாசான்சி, ஹோப் முதலியனவேயாம். மிக்க ஒளியும், நிறையுமுடை

யனவான சிலபெரிய ரத்தினங்கள் பூர்வத்தில் இந்தியாவில்தான் அகப்பட்டன இக்காலத்தில் சில பெரிய வைரங்கள், தென் ஆபிரிக்காவில் அகப்படுவதாய்த் தெரிகிறது; அவைகளில் (குலினன்) என்பதும் ஒன்று—

உயர்ந்த பத்மராகங்கள், மாணிக்கங்கள், இந்திரநீலம், வைடூர்யம், இவைகள் இந்தியாவில் சிலபாகங்களிலும், பர்மாவிலும், இலங்கையிலும் அகப்படுகின்றன.

குளிர்ந்ததேசங்களிலும், பனிமிகுதியுள்ள மலைகளிலும், சிலவகை ஸ்படிகக்கற்கள் அகப்படுகின்றன. அவைகளில் (சந்திரகாந்தம்) என்பது ஒன்று. இதை அரசர்கள் பூஞ்சோலைகளிலும் மாளிகைகளிலும் வைப்பார்கள். புஷ்பராகங்கள் அகப்படும் இடங்களில் சூரியகாந்தம் என்னும் ஸ்படிகம் அகப்படுகிறது. இதையும் அலங்காரமாக உபயோகப்படுத்திக் கொள்ளுகிறார்கள்.

உயர்ந்த முத்துக்கள் இலங்கை, பாரசீககுடா, சாதுதீவு ஆகிய இவ்விடங்களில் கிடைக்கின்றன; மத்தியதரைக்கடலில் ஆபிரிக்காவின் வடமாகாணத்தில் நல்ல பவழங்கள் கிளிமூக்கு நிறத்துடன் சிவந்ததாய் அகப்படுகின்றன.

உயர்ந்த நவரத்தினங்கள் முற்காலத்தில் இந்தியாவில் மிகுதியாய் அகப்பட்டன என்பதை **பிலினி, மார்க்கோ, போலோ, டாவர்ணியர்,** முதலிய இதரதேச யாத்திரைக்காரர் தங்கள் தேசத்தாருக்கு அறிவித்திருக்கிறார்கள்.

இவ்வித ரத்தினங்களின் உயர்வையும், மகிமைகளையும் அறிந்த ஆரியர்களும், பூர்வீக இந்திய ஸ்தல வாசிகளும், வேதங்களிலும், புராணங்களிலும், இதிஹாஸங்களிலும், காவியங்களிலும், பலவிதமாய் புகழ்ந்து வர்ணித்திருக்கிறார்கள். பாகவதத்தில் **ஸமந்தக மணியின் விசேஷத்தையும்,** அதினால் ஏற்பட்ட நன்மைகளையும் பற்றி ஸ்ரீகிருஷ்ணபகவான் வர்ணித்திருக்கிறார். ஆகவே நல்ல நவரத்தினங்களை அணிவதால் சகல பாக்கியங்களும் அடையலாகும் என்பது நிச்சயம்.

ஸ்ரீலக்ஷ்மிநாராயணவிலாசம்பிரஸ்:—சென்னை.

ரத்தினப் பிரகாசம்

கலைகள் அறுபத்து நான்கில் ரத்தின பரீட்சையும் ஒன்று. நம் தமிழ்ப்பாஷையில் இவ்விஷயத்தைத் தனியேகூறும் புஸ்தகங்கள் இப்பொழுது இருப்பதாகத்தெரியவில்லை. இந்தவிஷயமாகப் பல ஸம்ஸ்கிருத நூல்களிலும், தமிழ்நூல்களிலும் ஆங்கிலநூல்களிலும் கூறப்பட்டுள்ள நுண்ணிய விஷயங்கள் பலவற்றைத் தொகுத்தும் விளக்கியும் எழுதப்பட்ட இம்முதற்பாகத்தையும், ரத்தினங்களின் சரித்திரங்கள் விலை, மதிப்பு, நிறை அணிவதாலுண்டாகும் நன்மை, மிகவுயர்ந்த ரத்தினங்களின்வடிவு, கிடைக்குந் தேசம் ஆகிய இவற்றின்படம் முதலியவற்றையுடையதும் விரைவில் வெளிவரக்கூடியதுமான இரண்டாம்பாகத்தையும் இத்தேசத்துள்ள ரத்தினவியாபாரிகள், அரசர்கள், ஜமீன்தார்கள் மிராசுதார்கள்முதலிய எல்லோரும் படித்து விஷயங்களையறிந்து இன்புற்று, பலர்க்கும் உபயோகப்படும்படி ஒவ்வொரு புத்தகசாலைகளிலும் வாங்கிவைத்து எனக்கு ஊக்கமளிக்க விரும்புகின்றேன்.

இ

டி. பி. ஜெ

For copies Apply to

J. DAVEY & Co.,

TANJORI

March

Ratna Prakash on *Gems and Precious Stones* is the title of a book by Mr. T. B. Jayasunker Davey, of which the first part is issued in English and Tamil. *Mr. Davey has done a great service by writing in a manner that enables even a layman to value precious stones.* Copies can be had of Messrs. J. Davey and Company, Tanjore for 8 annas.

4626

Copies can be had of :—

MESSRS. P. R. RAMA IYAR & CO.

Esplanade Row, MADRAS

...LYANARAMA AIYAR & CO.

Esplanade Row, MADRAS

C. COMARASWAMI NAIDOO & SONS

Esplanade Row, MADRAS

TITLE PAGE PRINTED BY P. R. RAMA IYAR & CO., MADRAS